[illegible]

[illegible] 10 [illegible] 9

14 March 1425

SL
00211, N15 A13
M25 10.9
187468

Mar. 25
126

உ
ஓம்
பரப்பிரஹ்மணே நம:

# ஆனந்தபோதினி

"எப்பொருளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

(ALL RIGHTS RESERVED.)

தொகுதி 10 | இரக்தாட்சி ௵ பங்குனி ௴ ௧௳ | 1925 ௵ மார்ச்சு ௴ 14௳ | பகுதி 9

## கடவுள் வணக்கம்.

ஆசைக்கோ ரளவில்லை யகிலமெல் லாங்கட்டி
யாளினுங் கடன்மீதிலே
யாணைசெல வேநினைவ ரளகேச னிகராக
வம்பொன்மிக வைத்தபேரு
நேசித்து ரசவாத வித்தைக் கலைந்திடுவர்
நெடுநா ளிருந்தபேரு
நிலையாக வேயினுங் காயகற் பந்தேடி
நெஞ்சுபுண் ணாவரெல்லாம்
யோசிக்கும் வேளையிற் பசிதீர வுண்பது
முறங்குவது மாகமுடியு
முள்ளதே போதுநா னெனக் குளறியே
யொன்றைவிட் டொன்றுபற்றிப்
பாசக் கடற்குளே வீழாமன் மனதற்ற
பரிசுத்த நிலையை யருள்வாய்
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ணானந்தமே. (1)

---

மனத்தாலும் வாக்காலு மன்னவொண்ணா மோன
வினத்தாரே நல்ல வினத்தார்—கனத்தபுகழ்
கொண்டவரு மன்னவரே கூறரிய முத்திநெறி
கண்டவரு மன்னவரே காண். (2)

---

கண்ணொளியே மோனக் கரும்பே கவலையறப்
பண்ணொளிக்கு முள்ளொளியாம் பான்மையினை—நண்ணிடவுன்
சித்த மிரங்கிலதென் சித்தந் தெளியாவே
பித்தனைக்கு மாதரவு மில். (3)

---

OFFICE OF THE REGISTRAR ... APR 1925
187468

## அரும்பொருள் விளக்கம்.

1. ஆசையானது பொன், பெண், பூமி என்னும் மூன்றின் வாயிலாக வருவது. இந்த மூன்றும் நிலையில்லாதவையாயினும் இவற்றில் வைக்கும் ஆசைக்கு வரம்புகிடையாது. அதனால் 'ஆசைக்கோ ரளவில்லை' என்றார்.

அளவு=வரம்பு.

உலக முழுதும் ஆண்டாலும் பின்னும் ஆளவேண்டுமென்கிற அவா உண்டாவது சகஜமாதலால் 'அகிலமெல்லாங் கட்டி யாளினுங் கடல் மீதிலே யாணை செலவே நினைவர்' என்றார்.

அளகேசன்=அளகாபுரிக்குத் தலைவனான குபேரன்.

குபேர சம்பத்துடையவரும் மேலும் பெறக்கருதி இரசவாத வித்தையில் இறங்குவர் என்பார் 'அளகேச னிகராக வம்பொன் மிகவைத்தபேரும், நேசித்து ரசவாத வித்தைக் கலைந்திடுவர்' என்றார். இரசவாதம் துறவிகளுக் கல்லாமல் பிறர்க்குக் கைகூடுவது அருமையாதலின் 'அலைந்திடுவர்' என்றார்.

காயகற்பம் என்பது சரீரத்தை மூப்பு மரணம் என்பவற்றினின்றும் நீக்கவல்லதோர் அரிய மருந்து. இகபோகங்களை அநேக நாள் அனுபவித்த கிழவரும் தங்களுடலைக் காத்தற்குக் காயகற்பம் தேடி வருந்துவர் என்பார் 'நெடுநாளிருந்தபேரு நிலையாக வேயினுங் காயகற்பந்தேடி நெஞ்சு புண்ணாவர்' என்றார்.

இப்படிப் பற்பல விதமாக வருந்தி யலைவதெல்லாம் ஜாண் வயிற்றை வளர்ப்பதற்கே யாதலின் 'யோசிக்கும் வேளையில் பசிதீர வுண்பது முறங்குவதுமாக முடியும்' எனறார்.

இவ்வாறு உழலாமல் உள்ளதே போதும் என்று மனத்தில் திருப்தி யடைவதே முத்திநெறிக்கு உபாயமாதலின் 'உள்ளதே போது நா னெனக் குளறியே யொன்றைவிட் டொன்று பற்றிப் பாசக் கடற்குளே வீழாமல் மனதற்ற பரிசுத்த நிலையை யருள்வாய்' என்றார்.

மனத்தாலும் வாக்காலும் அறிந்து சொல்லப்படுவனவெல்லாம் அசத்தாகலின் 'மனதற்ற பரிசுத்த நிலையை யருள்வாய்' என்றார்.

2. மன்னவொண்ணா=நிலைக்கக்கூடாத.

மோனம்=மௌனநிலை.

மோன இனத்தர்=மௌன ஞானிகள்.

சுத்தாத்துவித சித்தாந்த வைதிகரே இந்த மௌன ஞானத்திற்குரியவராதலின் அவரே [illegible]கரும், கற்கீர்த்திக்குடையவரும், முத்திநெறி [illegible]

3. கண்ணொளி=கண்ணுக்குள் ஒளிக்கும் ஒளி.

கவலை=சஞ்சலம்.

[illegible]



ஒளிக்கும் உள்ளொளி=ஒளியினுக்கும் உள்ளே விளங்கும் ஒளி.

பான்மை=தன்மை.

இரங்கிலது=இரங்காதது.

எனது செயல் யாவற்றுக்கும் காரணம் தேவரீரே; உம்மையன்றி வேறு ஆதரவு இல்லை என்பதாம்.

---

# ஆனந்தபோதினி

இரக்தாட்சி௵ பங்குனிமீ கஉ

## உயிரினுஞ் சிறந்த தெது?

உலகிற் றோன்றிய சகல ஜீவராசிகளும் தத்தமது உயிரையே சிறந்ததாக மதித்து நடப்பதை நாம் அனுபவமா யறிந்து வருகிறோம். அவ்வாறிருந்தும் சாதாரணமாகத் தாய்மாருந் தந்தைமாரும் தாங்களருமையாகப் பெற்றெடுத்த தங்கள் குழந்தைகளைத் தங்களுடைய உயிர்போற் கருதி வருகிறார்களே அது பொய்யோவெனில், ஆழ்ந்து நோக்குமிடத்துப் பொய்யேயாம். உலகோபசாரமாக அவர்கள் அப்படி நடிக்கச் சம்பவிக்கின்றதே யல்லது வேறல்ல. அக் குழந்தைகளின்பொருட்டுத் தங்கள் பிராணனுக்குக் கெடுதி நேரிடுவதாயிருந்தால் பராமுகமாகத்தான் இருப்பார்கள்.

ஒரு காலத்தில் ஒரூரில் ஒரு குழந்தையை இழக்கநேர்ந்த அதன் பெற்றோரும், பாட்டன் பாட்டிமாரும், மற்றுமுள்ள சுற்றத்தாரும் சகிக்கவொண்ணாத துக்கங்கொண்டு "எங்கள் குலத்தைவிளக்கவந்த இப்பிள்ளையைப் பாழும் எமன் கொண்டுபோகத் துணிந்தானே; எங்களில் எவரையேனுங் கொண்டுபோகக்கூடாதா?" என்று பல பல சொல்லி, "இக்குழந்தை போனால் இனி நாங்கள் உயிர்வைத்திருக்கமாட்டோம்" என்று வாய்விட்டுரைத்துப் புலம்பிப் பரிதபித்தார்கள். இதைக்கண்ட எமதர்மராஜன் "ஆ ஹா! இவர்கள் இச்சிறு மகவின் நிமித்தம் கண்டோருங் கண் கலங்கும்படி இப்படி யழுதுவருந்துகிறார்களே, இதன் உண்

மையை நாம் கண்டறியவேண்டும்" என்றெண்ணினான். உடனே அவன் ஒரு விருத்தாப்பிய புருஷனாக உருவெடுத்துக்கொண்டு, இவர்கள்முன் தோன்றினான். தோன்றியதும் அவர்களைப் பார்த்து "கொஞ்சம் நிதானியுங்கள்; ஏன் வீணாக மண்டையை உடைத்துக்கொள்ளுகிறீர்கள்; இக்குழந்தை பிழைத்துக்கொள்ளும் மார்க்கம் ஒன்றிருக்கிறது. அதாவது உங்களில் எவராவது இக்குழந்தைக்குப் பதிலாக உயிர்துறக்க முன்வருவதாயிருந்தால், நான் எனது மந்திரபலத்தால் இதனை எழுப்பிவிடுகிறேன்; சீக்கிரம் இந்த யோசனைக்கு ஒருவர் உட்படுங்கள்" என்றான்.

இம்மொழியைக் கேட்டதும் அவர்கள் ஒருவர் முகத்தை யொருவர் நோக்கலானார்கள். அந்தநிமிஷமே அக்குழந்தையின் பாட்டனும் பாட்டியும் ஏதோ அவசர வேலையாக எழுந்து செல்வதுபோல வெளியே சென்று "நமக்கென்ன! நாம் இன்னும் கொஞ்சநாளிருக்கப்போகிறோம். அதற்குள் ஏன் நாம் அகால மரணத்துக் காளாகவேண்டும்? இந்தக்குழந்தை போனாலென்ன! இன்னொரு குழந்தையாகிறது" என்று பேசிக்கொண்டு வெளியிலேயே காலஹரணம் செய்துகொண்டிருந்தார்கள். பெற்றோரும் பிறரும் இவ்வண்ணமே தங்களுக்குத் தோன்றிய அபிப்பிராயப்படி முடிவு செய்துகொண்டு, விருத்தாப்பியர் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்காமலே மௌனஞ்சாதித்துவிட்டனர்.

வந்த வயோதிகரான எமதர்மராஜனும் "இந்த உபசாரத்திற்கா இப்படி நீங்கள் எவரும் பிரமிக்கும்படி ஏங்கி ஏங்கிப் புலம்பினீர்கள்" என்று சொல்லிவிட்டுத் தனதிடம் போயினான். இதனால் ஒவ்வொருவரும் தம் தம் உயிரையே எவற்றினும் சிறந்ததாக மதிப்பது நன்றாக வெளியாகின்றது.

இப்படி உயர்வாக மதிக்கப்படும் மக்களுயிர்க்கு உறுதியாகிய பெரும் பயனை யளிப்பதில் சிறந்தது எதுவோ அதனை நம்மிற் பலர் சிந்திப்பதில்லை. சிந்தித்தால் "அதுவே நாம் பற்றத்தக்க நல்ல அறம்" என்று அக்கொள்கையில் வழுவாது நிற்கவும், அப்படி நின்று இகத்துக்கும் பரத்துக்கும் உரிய சுகவாழ்வை எளிதிலடையவும் கூடுமல்லவா? அதனால் கீர்த்தியும் வெள்ளிடைமலைபோல எங்கும் பரவுமன்றோ? மற்றும் அதுவே, பிரம க்ஷத்திரிய வைசிய சூத்திரரென்னும் நான்கு வருணத்திற்கும், அவ்வருணத்துள்ள பிரமசரிய, கிருகஸ்த, வானப்பிரஸ்த, சந்நியாச



மென்னும் நான்கு நிலைமைக்கும் சிறப்பாகவும் பொதுவாகவும் இருந்து நலத்தைக் கொடுப்பதாம். அதுவே, பிறர் குற்றத்தைக் காண்பதுபோலத் தமது குற்றத்தையுங் காணவல்ல சமநோக்கத்தில் நின்று, மறந்தும் மனம் வாக்கு காயம் என்கிற மூன்று கரணங்களாலும் கெட்ட மார்க்கத்தில் பிரவேசியாதவரிடம் நிலையாகப் பொருந்துவதாம். அன்பர்களே! இவ்வாறு விளங்கும் அது எது?

அதுதான் ஒழுக்கம் என்பது. அதனையே நாயனார், உயிரினுஞ் சிறந்ததென்றும், ஒவ்வொருவரும் பாதுகாக்கவேண்டிய பொக்கிஷம் என்றும் உயர்த்திக் கூறினார். ஏன்? அதனைக் கைப்பற்றிய உயர்ந்தவர்க்கும் தாழ்ந்தவர்க்கும் அது சமமான மேம்பாட்டைக் கொடுக்கவல்லது; எல்லாத் தருமங்களையும் ஆராய்ந்து, அவற்றுள் இகத்துக்கும் பரத்துக்கும் துணையாவதெது வென்று மனத்தை யூன்றி நோக்குவோர்க்குத் துணையாக நிற்பது; தாழ்ந்த குலத்தவரையும் உயர்ந்த குலத்தவராக்கும் வல்லமையுடையது; தன்னைக் கைப்பற்றாத உயர்குலத்தாரைத் தாழ்குலத்தவராகச் செய்துவிடுவது; பொறாமையுள்ளவரிடம் செல்வந் தங்காததன்மை போலத் தன்னைப் பற்றாதாரிடம் உயர்வைத் தங்கவிடாதது; இவை முதலிய நற்குணங்கள் அதனிடம் குடிகொண்டிருத்தலால் என்க.

நமது பரதகண்டமானது ஆதியிலிருந்து நல்லொழுக்கத்தைக் கையாண்டுவரும் பாக்கியத்தைப் பெற்றிருத்தலினாற்றான் புண்ணியபூமி என்று யாவராலும் கொண்டாடப்பட்டு வருகின்றது. பரதகண்டத்திலும் தென்பாகமே இம்மேன்மைக்குரியதாய் விளங்குகின்றது. தெய்வ வழிபாடு, குலாசாரம், மதாசாரம், பெரியாரைப் போற்றல், தூய்மை, காருண்யம், பரோபகாரம், பிறர்பொருளை இச்சியாமை, பயனற்ற சொல்வழங்காமை, தீயாரைச் சேராமை முதலிய நற்பழக்கங்களே நமது முன்னோர் நமக்குத் தேடிவைத்த அழியாத ஆஸ்தி. இவற்றில் நாமே பிறதேசத்தாரைப் பெரும்பான்மையும் தோற்கடிக்கக் கூடியவராயிருக்கிறோம். ஸ்ரீமத் விவேகாநந்த சுவாமிகள் முதலிய பெரியோரால் மேல்நாட்டாரில் மேதாவியரான பலர் நமது ஞானநூல்களையும் உலக நூல்களையும் வியந்து நல்லொழுக்கத்தில் பழகிவரும் விருப்பத்தை மேற்கொண்டிருக்கின்றனர்; வடமொழியி

ளுள்ள உபநிஷத் முதலியவற்றை அமெரிக்கரும் ஜெர்மானியரும் பெரிதும் புகழ்ந்து, சிரோபூஷணமாகக்கொண்டு அந்திய காலத்தில் மக்களை யுய்விப்பதற்குரிய உத்தம நூல்கள் அவைகளே என்று வற்புறுத்திக் கூறியிருக்கின்றனர்.

மேலும் பரதகண்டத்திலுள்ளவர்கள் புண்ணியரும் புனித ஒழுக்கம் வாய்ந்தவருமெனக் கேட்டு அவர்களைக் கண்ணாரக் கண்டு, அக்காட்சியளவொன்றாலேயே பாபரகிதராய் நற்பேறடையலாமென்னும் உத்தேசத்தைக்கொண்டு, சில வருஷங்களுக்குமுன், அமெரிக்காவிலிருந்து ஒருவர்பெரும் பொருட்செலவில் இங்கு வந்ததாகவும், வந்தவர் முதல் முதல் வட இந்தியாவிலிருந்த இந்தியரையும், மகம்மதியரையும், பிறரையுஞ் சந்தித்ததாகவும், அப்படிச் சந்திக்கப்பட்டவர்களிடம் தாம் கேள்வியுற்ற நல்லொழுக்கங்கள் இல்லாதிருந்ததை நோக்கி வருந்தியதாகவும், உடனே தென்தேசம் வந்து ஆங்குள்ளவரிடம் அத்தூய ஒழுக்கங்களைப் பார்த்து மகிழ்ந்ததாகவும், தேவாலய ஒழுங்குகளையுங் கண்டு வியந்ததாகவும், அதனால் தமது முயற்சி பயன்பட்டு மீண்டும் அவர் தம்மூர்க்குத் திரும்பியதாகவும் ஒரு பத்திரிகை பேசக் கேட்டிருக்கிறோம். நமது நாட்டாராலும் பிற நாட்டாராலும் பாதகண்டம் இப்படிப் பலவாறு புகழ்பெற்றிருக்கின்றது.

இப்போது நாகரிகமுடையவர்களாகக் கொண்டாடப்பெறும் மேல்நாட்டாரும் 2000 வருஷங்களுக்குமுன் வனாந்தரங்களிலிருந்து மரவுரியணிந்து பறவைகளின் முட்டைகளையும் மச்சங்களையும் பச்சையாக வுட்கொண்டு வந்ததாகவும், பிறகு நமது தேச மூலமாகவே சீர்திருத்தம் பெற்றதாகவும் அவர்கள் சரித்திரமே புகல்கின்றது. ஆனால் அவர்கள் நமது தேசத்திற்கு வந்தபின் ஊருக்கு வெகுதூரத்தில் பங்களாக்களமைத்துக்கொண்டு நந்தேயத்தவரிற் றாழ்வான ஆசாரத்தையுடையவர்களைத் தம்மிடம் குற்றேவல் செய்ய வைத்துக்கொண்டமையால் அப்படி வைத்துக் கொள்ளப்பட்டவரின் ஆசாரமே நம் எல்லோரிடமும் உண்டெனத் தீர்மானித்து அதைத் தம்மவர்க்கு வெளிப்படுத்தி நம்மைச் சீர்திருத்தத் தலைப்பட்டனர்.

இதனைக் கண்டு மயங்கிய நம்மவரிற் சிலர் அவர்கள் பாஷையைப் பெரிதுங் கற்று, சுய பாஷையை அலக்ஷியம் செய்து, அவர்களுடைய நடையுடை பாவனைகளையே பின்பற்றத் தொட



ங்கிவிட்டனர். அந்தந்தத் தேசங்களுக்கும் சீதோஷ்ணஸ்திதியையொட்டி நடையுடை பாவனைகள் ஏற்பட்டுள்ளன. சுதேசத்துக் கட்டுத்தளைகளை விடுத்துப் பிறதேசத்தாரது ஆசாரங்களை நாம் மேற்கொள்வது பரிகசித்தற்கான விஷயமன்றோ? ஒரு தேசத்தார் மற்றொருதேசத்தாரது பழக்கவழக்கங்கள் முதலியவற்றை யனுசரிக்கத் தொடங்கினால் அது பழிப்புக்கிடமானதே என்பதை ஏன் நாம் உய்த்துணரக்கூடாது? நமது 'ஆனந்தபோதினி' தைமாத (1925ஆம் ஜனவரி மீ 13உ) சஞ்சிகையில் வந்துள்ள 'நம் நாடும் பத்திரிகைகளும்' என்னும் விஷயத்தை நன்கு கவனித்து இனியாவது பிசகிய நம்மவர் நமது பூர்வீக அனுஷ்டானங்களைப் பின்பற்றி நமது நாட்டை முன்னேற்றமடையச் செய்வார்களாக. இத்தகைய விஷயங்களை நம்மவர்க்கு அறிவாளர் இப்போது அடிக்கடி தெரிவித்து வருவதால், நாம இதை வளர்த்தாது நிறுத்துகின்றோம். சர்வ வல்லமை பொருந்திய பகவான் நம்மவர்க்கு இது சம்பந்தமான நல்ல நாட்டத்தைக் கொடுத்து ரக்ஷித்தருள்வானாக. சுபம்.

ஓம் தத்ஸத்.

---

## விவசாயம்.

விவசாயமில்லையேல் உலக நடவடிக்கைகளில் யாதொன்றும் இயங்காதென்னுங் காரணத்தை நாம் கண்கூடாக அறிகிறமையால், அதைப்பற்றிப் பன்முறை எழுதினும் பழுதாகாதெனக்கருதியே இச்சிறு வியாசத்தை வரையத் துணிந்தேன்.

'விவசாயமில்லையேல் உலகமில்லை.' விவசாயமென்பது வார்த்தையளவிலும் வெறுங் கல்வி கேள்விகளினாலும், தற்கால நாகரீக மக்களுக்கு மிக வெளிதான அற்பச் சொல்லாயிருப்பினும் "விவசாயமோ ரசவாதமோ" என்னுங் கருத்துத்தோன்றச் செய்கையளவாலும், அதனால் உண்டாகும் அபார நன்மையாலும், மிகவும் பெரிதென்றே தோன்றா நிற்கிறது. ஆதிகாலந்தொட்டு இன்றைக்கும் நம்மிந்தியநாட்டில் பெரும்பான்மையோர் விவசாயஜீவனமே மேற்கொண்டு, விவசாயிகளல்லாத வேனையோரையும் ஆதரித்து வருகின்றார்கள். ஆனால் சிலவாண்டுகளாகத் தற்காலச் சீர்கேடான கல்வியினாலும், அதனாலடைந்த தகாத நாகரீக பலன்களினாலும் விவசாயத் தொழில் குன்றிவருகிறது.

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாந்
தொழுதுண்டு பின்செல் பவர்"

என்னும் நம் தெய்வப்புலமைத் திருவள்ளுவர் திருவாய்மலர்ந்தருளிய

அருள்வாக்கினை அறியாதவராய், விவசாயத் தொழிலில் ஊக்கம் குறைந்த விவசாயிகளுடைய மக்களும் அவர்களின் தொழிலைச் செய்யாமலும், அதைச் செய்தால் அகௌரவமென்றெண்ணியும், மற்றவர்களிடஞ் சென்றிரந்தும், சேவித்தும் ஜீவிப்பதே பெருமையும் சுகஜீவனமுமென்று கருதி நாட்டிற்கே கேட்டை விளைவிக்கும் நிலைமையை எதிர்பார்க்கிறார்கள்.

உய்த்துணர்வோமாயின் சில பெற்றோரே இதற்குக் காரணமெனத் தோன்றுகிறது. எங்ஙனமெனின் விவசாயத்தொழில் செய்தால் இக்காலத்தில் பெருமை இல்லையென்றும், உத்தியோகத்தோரணையிலிருப்பதே கௌரவமென்றும், தவறான அபிப்பிராயங்கொண்டு, அவர்கள் தங்கள் பிள்ளைகளைச் சேவகத்தொழிலிலமர்த்திவிடுகிறார்கள். இத்தவறான அபிப்பிராயத்தை நீக்கி அவர்கள், தமது மக்களுக்கு, கற்ற கல்வியோடு விவசாய சம்பந்தமான கல்வியையும் புகட்டி, அவ்வித அறிவைக்கொண்டு சீர்திருத்தமான விவசாயத்தைச் செய்வித்தால் அன்னோர் மேன்மேலும் பயனையடைந்து, அடிமைத் தொழிலைநீக்கி, சேவகஞ்செய்து காலட்சேபஞ் செய்வதைத் தவிர்த்து, அனைவருக்கும்பேருபகாரராயிருப்பார்களென்பதை யறியவேண்டியதவசியம்.

தற்கால பண்டங்களின் விலைவாசிகள் ஏறியிருப்பதற்குள்ள பல முக்கியமான காரணங்களுள் ஒன்று பண்டைக்காலத்தில் ஜனத்தொகை குறைவாயிருந்ததோடு மக்கள் தங்களுக்கு ஏற்றவாறு விவசாயஞ்செய்து குறைவின்றிச் சுகமே உண்டுவாழ்ந்து, மற்றையோரையும் ஆதரித்து வந்தார்கள். இக்காலத்திலோ ஜனதொகையினேற்றத்திற்குத் தகுந்தவாறு, அதற்குரியவர்கள் விவசாயத்தை மேற்கொள்ளாமல் வேறு மார்க்கங்களில் புகுந்து பணத்தை மலிவாக்கிப் பண்டங்களைக் குறைவாக்கி, கஷ்ட ஜீவனத்தையும் அடிமைத்தனத்தையுமே திட்டமென்றெண்ணி இட்டத்துடன் மேற்கொண்டார்கள். "(மெழிச்செல்வம் கோழைபடாது" என்பதை இவர்கள் அறியார்கள் போலும். தற்கால உலகவேறுபாட்டிற்குத் தகுந்தவாறே, விவசாயத்தை அனுசரித்துவரும் காலமும் மாறுபட்டு வருகின்றதென்பது விந்தையாகாது. இப்பொழுதும் கிராமங்களில் சென்று சுற்றிப் பார்த்தால் சில இடங்களில் விவசாயஞ்செய்துவந்த புலங்களும் தரம்பாயிருக்கக்காணலாம்.

இவையனைத்திற்கும் காரணம் இம்மை மறுமைப் பயன்களைத் தரக்கூடிய கல்வியோடு விவசாயசம்பந்தமான கல்வியுமில்லாதிருத்தலும், கற்றோரால் விவசாயிகளோ அல்லது விவசாயத்தொழிலோ ஆதரிக்கப்படாமையும், அவர்களின் புதல்வர்களுக்கு அவசியமான கல்வியைப் புகட்டாமையுமே. பெரும்பான்மையோர் தற்சமயம் கொண்டிருக்கும் முற்கூறிய தவறான அபிப்பிராயங்களை அறவேயொழித்து விவசாயத்தின் அத்தியாவசியத்தையும், விவசாயிகளின் பெருமையையும் உய்த்துணர்வார்களாயின் அவைகளின் உண்மை தெற்றென விளங்கும்.



மேற்படி தொழிலும், அதன் அத்தியாவசியமும், அதற்குடையவர்களின் பெருமையும் விரிக்கிற் பெருகும். இவ்வுலகின்கண் உயிர்வாழ்வனவெல்லாம், ஜீவித்திருப்பதற்கேதுவாயுள்ளவை, காற்று, சூரியவெப்பம், தண்ணீர், உணவு முதலியவையெனினும், முன்னவை மூன்றும் சிவச்செயலாலாவதன்றிச் சீவச்செயலா லாவதில்லையாகையால், பின்னதாகிய உணவுக்கு வேண்டியவற்றை முற்சொன்ன மூன்றின் உதவியைக்கொண்டு நம்முடைய முயற்சியால் தேடிக்கொள்ளவேண்டியது அவசியம். கருணைகூர்ந்து கடவுளால் அளிக்கப்பட்ட அவ்வித உதவியைக்கொண்டு உணவைச் சம்பாதிப்பது விவசாயத் தொழிலினாலன்றி மற்ற எதனாலும் இயலாதாகையால் விவசாயத்தின் அத்தியாவசியத்தைப்பற்றி யதிகமாய்க் கூறவும் வேண்டுமோ? 'செங்கோலைக் காத்தும்கோல் ஏரடிக்கும் சிறுகோலே' என்றதினாலும் 'அழியாச்செல்வம் விளைவேயாதும்' என்றதினாலும் இதனவசியம் விளங்கும்.

"சுவரை வைத்தல்லோ சித்திரம் எழுதவேண்டும்". "பானையிலிருந்தாலல்லவோ அகப்பையில் வரும்". இவை போல விவசாயமிருந்தாலல்லவோ விளைபொருளின்பெருக்கால், வியாபாரமும் கைத்தொழிலும் காப்பாற்றப்பட்டு அதனால் உலகமும் செழிக்கும். மற்றும், இந்நாட்டின் பூர்விக விவசாயப் பெருக்கினாலல்லோ வெல்லத்தை எறும்பு சூழ்வதுபோல் வியாபாரத்தோரணையால் இந்நாட்டில் தற்கால அரசாட்சி திடமான நிலைபெற்று 'குன்றின்மேல் தீபம்போல்' விளங்காநிற்கின்றது.

சிறக்க, அவ்வித விவசாயத்தைச் செய்பவர்களின் பெருமையை எடுத்துரைக்கின் இவ்வேடு இடந்தராதாகையால் அதைப்பற்றிச் சுருக்கமாய்க் கூறி எடுத்துக்கொண்ட விடயத்தைப் பூர்த்தி செய்கிறேன். இவ்வுலகின்கண் எவ்வகைத் தொழிலினும் விவசாயமே சிறந்து விளங்குவதென்று நம் மூதாதைகளாலும், தெய்வப் புலவர், ஔவை, நாலடியார் முதலானவர்களாலும் சிறப்பித்துக் கூறப்பட்டிருக்கிறதென்றால் அத்தொழிலைச் செய்பவர்களின் மேன்மையும், கீர்த்திப் பிரதாபமும் எவ்வளவு சிறந்ததாகவிருக்க வேண்டும்!

"ஆற்றங் கரையின் மரமு மரசறிய
வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே—யேற்ற
முழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு"

"தொழுதூண் சுவையின் உழுதுண்ணினிது"

"சீரைத்தேடின் ஏரைத்தேடு"

என்னுமிந்த வாக்குகளினால் இத்தொழிலின் சிறப்பு "உள்ளங்கை நெல்லிக்கனி" யென விளங்கா நிற்கிறது. இனி இத்தொழிலினைச் செய்யும் வேளாளரின் சிறப்பும், பெருமையும் என்னெனக் கருதுவோம்.

"வேதநூன் முதலாகி விளங்குகின்ற கலையனைத்தும்
ஓதுவா ரெல்லாம் உழுவார்தந் தலைக் கடைக்கே
கோதைவேன் மன்னவர்தங் குடைவளமுங் கொழுவளமே
ஆதலால் இவர்பெருமை யார் உரைக்க வல்லாரே"
—(கம்பர் ஏரெழுபது)

இமயமலை அரையன்மகள் தழுவக் கச்சி
எகம்பர் திருமேனி குழைந்த ஞான்று
சமயமவை ஆறினுக்குந் தலைவிக் கீசர்
தந்தபடி எட்டுழக்கு ஈராழி செல்லும்
உமைதிருச்சு டகக்கையால் கொடுக்க வாங்கி
உழவுதொழி லால்பெருக்கி உலக மெல்லாந்
தமதுகொழு மிகுதிகொடு வளர்க்கும் வேளாண்
தலைவர்பெரும் புகழுலகில் தழைத்த தன்றே.
(சேக்கிழார்புராணம்.)

என்னுமிச் செய்யுட்களினால் இவர்கள் பெருமையும், இவ்வேளாளர்கள் உழுதலாகிய தங்கள் தொழிலைச் செய்யாரெனின், உலகமாளும் அரசரும் தம் தொழிலைச் செய்ய வியலாது என்பதும் அறியக் கிடக்கின்றன. இக் கருத்துத் தோன்றவே 'குடித்தனம் செழித்தால் துரைத்தனம் செழிக்கு'மென்றும் 'குடியுயரக் கோன் உயரும்' என்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆதலால் இத்தொழிலையும் அவரையும் அவமதிக்காது ஆதரித்து இக் காலத்தில் உதவிபுரியவேண்டுவது நம் கடமையாகுமன்றோ.

நியாயஸ்தலமே தேவாலயமாகவும், நியாயவாதியே தெய்வமாகவும், வக்கீல்களே பூசாரிகளாகவும் எண்ணி, தஸ்தாவேஜுகளைத் தாம்பூலநைவேத்தியங்களாகப் பாவித்து (கற்பனை) சாட்சிகளாகிய கற்பூர ஆராதனையினால் கிடைக்கும் நியாயமே தெய்வப் பிரசாதமென்று நினைத்து, வீண் விவகாரங்களில் புகுந்து பலவாண்டுகளானாலும் கோர்ட்டுங்கையுமாயலைந்து காலத்தை வீணாக்காமல் விவசாயிகள் தங்கள் தொழிலைச் செய்து, பின்னால் அதைத் தங்கள் புதல்வர்கள் கைக்கொண்டு விருத்திசெய்தால்தான் நம் நாடு சீர்பெறும் என்பதை யுணர்ந்து ஒழுகவேண்டும்.

A. S. நித்தியகல்யாணரெட்டி,
(விவசாய டிபார்ட்மெண்டு), செங்கல்பட்டு.

குறிப்பு:—இக்காலத்தில் பெற்றோர் தம் மக்களுக்குக் கல்வி கற்பிப்பது சேவகாவிர்த்தி செய்யவே யென்று கருதி, பிள்ளைகள் பரீட்சையில் தேரியதே கல்வி முடிந்ததாக வெண்ணி அவர்கள் ஒரு உத்தியோகத்தில் அமர்ந்துவிட்டால் தங்கள் கடன் கழிந்ததாகக் கருதுகிறார்கள். தம்மக்கள் கற்ற கல்வி இகத்திற்கேனும் பரத்திற்கேனும் பயன்படுமாவென்பதைச் சற்றும் கவனிப்பதேயில்லை. பிள்ளை பரீட்சையில் தேரியதோடு கோற் சட்டை, பூட்ஸ், கழுத்துப்பட்டை, தொப்பி முதலியவை அடங்கிய மேல்நாட்டு



வேடமணிந்துகொண்டால் அப்போதே பிள்ளைக்குப் பெரிய உத்தியோகம் வந்துவிட்டதாக மகிழ்ந்து அவனுக்கு இவர்கள் பணிவிடைசெய்யத் தொடங்கிவிடுகிறார்கள். பிள்ளைகளும் கல்விகற்கும்போதே நாம் படிப்பது உத்தியோகம் செய்யவே, அதுவே கௌரவத்தொழில், மற்ற விவசாயம் வர்த்தகம் முதலியன இழிதொழில் என்று எண்ணுகிறார்கள். இவர்கள் கற்கும் கல்வி இவர்களுக்குச் சுயாதீன உணர்ச்சியில்லாமலும், சுயாதீனத் தொழிலின் கௌரவமும் நன்மையும் தெரியவொட்டாமலும் செய்துவிடுவதோடு அடிமைத்தொழிலிலேயே ஆவலை யுண்டாக்கிவிடுகிறது. இவர்கள் கல்வியும் அந்த ஒரு தொழில் செய்யமட்டுமே உபயோகப்படும்.

இக்கல்வியையே பெரும்பாலோர் பணவிரயம் செய்து கற்றுப் பட்டம்பெற்று ஏழைகளானபின் வேலையகப்படாமல் அவதிப்படுகிறார்கள். இது யார் குற்றம்? பெற்றோர் குற்றமேயன்றோ. இதைப்பற்றி "உண்மையுரைப்போன்" என்பவர் "பொதுநலம்" என்னும் பத்திரிகையில் வரைந்துள்ளார்.

1. பெற்றோர் தம் மக்களுக்குச் சேவகாவிர்த்தியாகிய அடிமைத் தொழிலிலுள்ள இச்சையை யொழிக்கவேண்டும்.

2. விவசாயம், வர்த்தகம், கைத்தொழில் முதலிய சுயாதீனத்தொழில்களிலுள்ள நன்மையையும் கௌரவத்தையும் நம் மக்கள் உணரும்படி செய்து அவற்றில ஏதேனும் ஒன்று இரண்டிற்கு வேண்டிய கல்வியை யவர்களுக்குக் கற்பிக்கவேண்டும்.

உலகில் விவசாயிகளும் வர்த்தகருமே செல்வமுடையோர் என்பது பிரத்தியட்சமாய்த் தெரிகிறதன்றோ. நமக்கு வேண்டியவற்றிற்கு அன்னிய நாடுகளை யெதிர்பார்க்காவண்ணம் நம் நாட்டில் கல்விகற்றோர் மேற்கண்ட தொழில்களைச் செய்யத்தொடங்கினால்தான், நம் நாடு செல்வமும் பலமும் மதிப்புமுடைய நாடாகும். இதைச் செய்வதைவிட்டு வாயால்மட்டும் எத்தனை நாட்கள் பேசிக்கொண்டிருந்தாலும் ஒருபயனுமடையமாட்டோம். விரிவஞ்சி இத்துடன் நிறுத்துகிறோம்.

பத்திராசிரியர்.

## நம்மவர் கவனிக்கவேண்டிய முக்கிய விஷயம்.

அன்புமிகுந்த நண்பர்களே! நமது ஆனந்தபோதினி முதலிய பல பத்திரிகைகள் நமக்குப் பன்முறை எச்சரித்திருந்தும் இன்னும் பல விடங்களில், நெஞ்சு திடுக்கிடத்தக்க பல கொடுஞ் செயல்கள் நடந்துகொண்டேதானிருக்கின்றன. நம்மவர்கள், படித்ததினால் அடையவிருக்கும் பாக்கியத்தை என்றுதான் செய்கையிற் பெறுவார்களோ? நாம் அறியோம்.

அன்பர்களே! நம் தென்னிந்தியாவில் கடந்த 1923-ம் வருடத்தில் புரோடஸ்டாண்டு கிறிஸ்தவ சபைகளில் ஒன்றாகிய சர்ச் ஆப் ஸ்வீடன் மிஷின் சங்கத்தாரால்மட்டும் கிறிஸ்து சமயத்தில் சேர்த்துக்கொள்ளப்

பட்ட நம் சகோதர சகோதரிகள் 754 பேர்களாகும். அவற்றின் விவரம் அடியிற் கூறுகிறோம்.

| | | | |
|---|---|---|---|
| திருச்சிராப்பள்ளியில் | 7 | உசிலம்பட்டியில் | 40 |
| திண்டுக்கல்லில் | 8 | விருதுபட்டியில் | 42 |
| உத்தமபாளையத்தில் | 8 | முதுகுளத்தூரில் | 68 |
| தரங்கம்பாடியில் | 12 | திருப்பூரில் | 115 |
| மதுரையில் | 13 | பொள்ளாச்சியில் | 135 |
| பலவூரில் | 27 | பரமக்குடியில் | 208 |
| திருவள்ளூரில் | 33 | | |
| சாத்தூரில் | 38 | ஆக மொத்தம் ... | 754 |

அதாவது பல்வேறுவகைப்பட்ட கிறிஸ்துசமயத்தின் ஒரு வகுப்புக்கு மட்டும் மேலே குறிப்பிட்ட நம் சகோதர சகோதரிகளை அனியாயமாய் உயிரோடு பறிகொடுத்திருக்கிறோம். மற்ற எண்ணிக்கையற்ற கிறிஸ்தவ சபைகளுக்கு நம்மில் எத்தனை பெயர்கள் இரையானார்களோ? யாமறியோம்.

கிறிஸ்து சமயத்தைப்பற்றியாவது, கிறிஸ்தவர்களைப்பற்றியாவது, 'பைபில் உமன்' என்ற உபாத்தினிகளைப்பற்றியாவது சொந்த மதத்தைக் கைவிட்டுத் துன்பப்படும் நம் பால்யப்பெண்களைப்பற்றியாவது நமக்கு மன வருத்தமில்லை. இவை யாவற்றிற்கும் காரணமாகிய தாய்தந்தைகளைப்பற்றியே நாம் பெரிதும் வருந்துகிறோம். அந்தோ! சயகல மாதர்களின் மாய வலைக்குட்பட்டு மடிவதுதானோ நம் இந்தியச் சிறுமிகளின் தற்காலத் தலையெழுத்து? அன்பர்களே! இன்னுமா? உறக்கம்!

எம்போன்ற பலர், பத்திரிகைகளின் மூலமாகவும் பிரசங்க வாயிலாகவும் "இந்துமதத்தையே கொள்ளையடிக்கச் சிலர் கருதிவிட்டார்கள். அக்கூட்டத்தார் வெளிநாடுகளிலிருந்து வந்து குவிந்துவிட்டார்கள். எச்சரிக்கையாயிருங்கள். அன்னியரோடு வாதுபுரிந்து வெற்றியடைய விரும்பாவிடினும் தற்காப்பேனும் மிக்க அவசியம்" என்று அடிக்கடி கூறுகிறார்கள். அவ்வளவேயன்றி, வேறொன்றும் செய்யக் கடமைப்பட்டவர்களாய்க் காட்டிக்கொள்ளவில்லை.

இனி, சைவசமய குருமார்களாகிய மடாதிபதிகளிற் பலர் "நாங்கள் பசுவின் கட்டிப்பாலை புண்ணவும், பட்டுப் பஞ்சணையில் உறங்கவும், பொன்னாபரணங்களைப் பூணவும், பீதாம்பரங்களை யுடுத்தவும், மற்றும் இகலோக பாக்கியங்களை யனுபவிக்கவுமே நியமிக்கப்பட்டோம்" என்று உறுதியாய் நம்பிவிட்டார்கள். "நாம் சைவசமய பரிபாலனத்திற்காகவே ஏற்படுத்தப் பட்டோம். அதைப் பாதுகாக்கும் பெரும் பொறுப்பு நம்மிடத்திலிருக்கிறது. நாம் செய்யவேண்டிய கடமைகளைச் செய்யாதொழியின் தீராத பாவத்திற்காளாக நேரிடும்" என்ற உணர்ச்சி எள்ளளவேனும் இருப்பதாய்த் தெரியவில்லை.

இனி, அரசாங்கமோ நம்முடையதல்ல என்றாலும், அதிற் பெரும் பதவிகளைப்பெற்று வீற்றிருக்கும் நம்மவர்களோ சமய விஷயத்தில் தலையிடுவதில்லை. சட்டசபை யுறுப்பினர்களாகிய நம்மவர்கள், உண்மையா யுழைப்பவர் சிலரும், கட்சிப் பிரிவினைகளினால் எது பேசினும் வாது புரிபவர் சிலரும், கௌரவ கைகாட்டி மரங்களைப்போற் சிலருமாக தங்கள் காலத்தைக் கழித்துவருகிறார்கள். ஆகவே உத்தியோகங்களில் அமர்ந்த நம்மவர்களிற் பெரும்பான்மையோர் நமது சமய வளர்ச்சியையல்ல சமயப் பாதுகாப்புக்கு ஆன முயற்சியைக்கூட செய்பவர்களாயில்லை. ஏனெனில் அவர்கள் வாசித்த கல்வியில் சமயபோதனையில்லை போலும்.



இனி, பத்திரிகாசிரியர்களிற் பலர் இன்னும் நம்மவர்கட்குப் பத்திரிகாபிமானம் ஏற்படவில்லையென்பதை நன்றாய்த் தெரிந்துகொண்டார்கள். மிகச் சொற்ப சந்தாதாரர்களாயுள்ள நமது சமயத்திற்கென்றே பத்திரிகையை நடத்துவதாயின் நாமும் ஆதரிப்பதில்லை. அன்னியர்களாலும் புறக்கணிக்கப்படுகிறது. முடிவில் பத்திரிகையும் இருந்த விடம் தெரியாமல் மறைந்துவிடுகிறது. இவ்வாறு தோன்றி மறைந்த பல பத்திரிகைகளை நாம் அநுபவமாய்க் கண்டிருக்கிறோம். ஆதலால், பல பத்திரிகையின் அதிபர்களுக்கு நமக்காகத் தனியே உழைக்க விருப்பமிருப்பினும், செய்கையிற் காட்ட சந்தாதாரர்களாகிய நம்மையே எதிர்நோக்கிக்கொண்டிருக்கிறார்கள்.

இனி, சிற்றரசர்கள், ஜமீன்தாரர்கள், மிட்டாதாரர்கள், பிராசுதாரர்கள் ஆகிய செல்வவந்தர்களான பிரபுக்களில் நூற்றுக்குத் தொண்ணூற்றைந்து பேர்கள் சமயத்திற்காகப் பாடுபடுகிறவர்களாயில்லை. இவர்களில் எவர்களேனும் தனித்தோ, சேர்ந்தோ நம் ஒப்பற்ற சமய பாதுகாப்புக்குத் தீவிரமான முயற்சிகளைச் செய்வார்களாயின் இம்மையிலும், மறுமையிலும் பெரும்பலனைப் பெற்றுய்வார்கள். கரையில்லாத கடலைப்போன்ற நம் சமயத்திற்கு நிலையில்லாத செல்வத்தை உதவுகின்ற நன்னோக்கமுடைய பெருந்தகையாளர்கள் நம் நாட்டில் இல்லையா? இருந்தும் எழுந்துவர மனமில்லையா? வென வினவுகிறோம்.

இனி ஆத்மஞானம் நிரம்பியவர்களும், ஆத்மஞானப் பயிற்சியுடையவர்களுமாகிய நம் பெரியோர்கள் நம் சமயத்தவர்களின் தற்காலப் பரிதாப நிலைமையைக் கவனிப்பதில்லை. ஏனெனில் புறச்சமயத்தவர்களைக்கூட அவர்கள் ஈஸ்வர சொரூபமாகவே கருதுகிறார்கள். 'அன்னியம்' என்று ஒன்றில்லையென்பதே அப் பெரியோர்களின் முக்கிய நோக்கம். எவரேனும் துன்பம் விளைவிக்ினும் "எய்தவனை நோவாமல் அம்பை நோவதாலென்ன பயன்?" என்று கூறி இறைவனையே நோக்குகிறார்கள். ஆகவே, நம் பெரியோர்களுக்கு அன்னியர்களைப்போல பேதபுத்தி யில்லையாதலாலும், எம்மதமும் சம்மதமே யென்று கருதுவதாலும், எந்த மதம் உலகிலுள்ள சகல மதங்களையும் தன்னுள் அடக்கியிருக்கிறதோ அந்த மதம் எக்காலத்தும் அழிவில்லாதது என்ற உறுதிப்பாடுடையவர்களாதலாலும் அவர்கள் இவ்விஷயத்தைச் சிறிதேனும் பொருட்படுத்துவதில்லை.

இனி, நம்மவர்களிற் கல்வியும், அறிவும் நிரம்பிய பலர் "சைவம் பெரிதா? வைணவம் பெரிதா?" "தென்மொழி சிறந்ததா? வடமொழி சிறந்ததா?" "தமிழ் மூர்த்தியா? ஆரியம் மூர்த்தியா?" வென்ற ஐயப்பாடுகளிலேயே தங்கள் காலத்தைக் கழிக்கிறார்கள். அன்னிய மதஸ்தர்கள் நம் உயிரினுஞ் சிறந்த மதத்திற்கே கேட்டை விளைவிக்கக் கருதும்பொழுது இத்தகைய ஆராய்ச்சித் துறைகள் அவசியமா? வென்பதுதான் நமக்குப் புலப்படவில்லை.

இனி, நம்நாட்டு வியாபாரிகளிற் பெரும்பான்மையோர் தங்களையே சிறிதும் சீர்திருத்திக்கொள்ளக் கருதாதவர்கள். தமது பாட்டன் உப்பு விற்றிருந்தால் உப்பும், புளி விற்றிருந்தால் புளியும் விற்பதே தொழிலாக உடையவர்கள். புளி வாங்குமிடத்தில் மிளகாய் குறைந்த விலைக்குக் கிடைத்தாலும் "வாங்கி விற்றால் கையைக் கடிக்கும்" என்று நினைப்பவர்கள். இவர்கள் மேல்நாட்டு வர்த்தகர்களின் செய்கைகளைக் கண்டால், மனிதனால் ஆகாத தெய்வச் செயலாகவே கருதுகிறவர்கள். இவர்களுக்கு அரசாங்க விஷயத்தைப்பற்றியாவது, நமது நாட்டின் முன்னேற்றத்தைப் பற்றியாவது, தாய்மொழியின் நிலைமையைப்பற்றியாவது சிறிதும் அக்கறையில்லை. இவர்கள் தங்கள் மக்களுக்கே சரியாய்க் கல்வி கற்பிக்கக் கருதுவதில்லை. இவ்விதமானால் எவ்விதமாகும்.

சகோதர சகோதரிகளே! இதுகாறும் நாம் மேலேகூறிய சமய பாதுகாப்புக்கு ஆன முயற்சியைச் செய்யுந்திறமையுடையவர்களாகிய பத்திரிகை வாசிப்போர், சொற்பொழிவாளர்கள், மடாதிபதிகள், உத்தியோகஸ்தர்கள், பத்திரிகாசிரியர்கள், செல்வவந்தர்கள், ஆன்மஞானிகள், புலவர்கள், வியாபாரிகள் என்ற ஒன்பது வகையினர்களும் எக்காரணத்தைக்கொண்டோ தங்களின் இயற்கையான குணத்தை வெளிக்காட்டாமல் அலையில்லாத கடல்போல விருக்கின்றார்கள். இது மிக்க விசனிக்கத்தக்க ஓர் துக்ககரமான விஷயமல்லவா?

அன்பர்களே! இனி நாம் என்ன செய்யவேண்டும்? வல்லமையுடைய பெரியார்கள் காது கேட்காதவர்களைப்போன்று இருந்தால் இருக்கட்டும். நமக்கு வேறு வழி ஒன்று உண்டு. அதைச் செய்வதற்குப் பொருட்செலவுமில்லை. மேலே கூறிய எவர்களுடைய உதவியையும் எதிர்பார்க்க வேண்டியதுமில்லை. நமக்கு தேகச்சிரமமுமில்லை. வெற்றிபெறுவதற்குச் சந்தேகமுமில்லை. ஆகவே கீழ்க்கண்ட விஷயத்தைக் கவனித்து வாசியுங்கள்.

"நாம் ஒவ்வொருவரும் நம் வீட்டுவரையில் எச்சரிக்கையாயிருப்போம். பெண்களைக் கொள்ளையடிக்கும் பெண் பேய்களை நம் வீட்டுவழி வரமுடியாமல் விரட்டுவோம். அன்னியமதம் போதிக்கப்படும் பாடசாலைகளுக்கு நம் மக்களை யனுப்பாதிருப்போம். அவர்களின் சகவாசத்தில் சில விஷயங்களைக்கூடப் பழகவிடாதிருப்போம்" என்பதேயாகும். நன்றாய் யோசித்துப்பாருங்கள், இது எவராலும் முடியக்கூடிய காரியமே. இவ்



விஷயத்தை நமது ஹிருதயத்தில் என்றென்றும் வைத்திருப்போம். இக்காலத்தில் 'இதைச் செய்யத் தவறுவதில்லை' யென்ற உறுதியோடிருப்போம். அன்பர்களே! நாம் இவ்விதஞ் செய்வதால், நம் அருமையான மக்களுக்கும், ஒப்பற்ற சமயத்திற்கும் இதுவரை யியற்றிவந்த கெடுதிகளையும், பாவத்தையும் செய்யாதவர்களாவோம் என்பதை மனப்பூர்வமாக நம்புங்கள். நமது ஒப்பற்ற சமயத்தை இப்பரந்த உலகமே போற்றச் செய்யுங்கள்.

ஆராவமுதும் அளவிலாப் பெம்மானும், ஓராதாருள்ளத் தொளிக்கும் ஒளியானும் ஆகிய இறைவன் நமக்கு அன்னியர்களுடைய நயவஞ்சகத்தை யறிந்து விலகி நடக்கும் அறிவைக் கொடுத்தருள்புரியுமாறு வேண்டுகிறோம்.

கி. ஆ. பெ. விசுவநாத பிள்ளை,
மணிவாசகத் தமிழகம், திருச்சிராப்பள்ளி.

---

## பஞ்சாங்க சந்தேக நிவர்த்தி.

கனவான்களே! நம் பாரதநாடாகிய தாய்நாட்டில் நடைபெற்று வருகின்ற தமிழ், தெலுங்கு கன்னட பாஷைகளில் கணித்துவரும் வாக்கிய பஞ்சாங்கத்தைக் கொண்டு ஏற்படும் ஜாதகம், குறிப்பு, பிரஸ்னை, இந்தப் பலன்கள் வாக்கியத்தில் ஒன்றுக் கொன்று வித்தியாசமா யிருக்கின்றன. இரக்தாக்ஷி௵ தை௴ 7-ந்தேதி மேஷத்தில் குஜன், 17-ந்தேதி மகரபுதன், 22-ந்தேதி மகரசுக்கிரன் என்று இவ்விதமா யிருக்கின்றன. ஆனந்தபோதினி திருக்கணித பஞ்சாங்கத்தில் ஷை மாதம் 12-ந்தேதி மேஷகுஜன், 29-ந்தேதி மகரசுக்கிரன், 21-ந்தேதி மகரபுதன் என்றும், திதி, நக்ஷத்திர, யோக, கரண சாரங்களும் வித்தியாசமா யிருக்கின்றன. அப்படி இருப்பதினால் எந்தப் பஞ்சாங்கத்தைக்கொண்டு கணிக்கக்கூடும். இதனால் அநேக ஜனங்களுடைய அபிப்பிராயமாவது, பஞ்சாங்கமே ஒன்றுக்கொன்று வித்தியாசமாய் இருப்பதால், சாஸ்திர விஷயத்தைப்பற்றி அவநம்பிக்கையாகி ஷை சாஸ்திரத்தைக் கேவலமாய் மதிக்கின்றனர். 18 - சித்தாந்தங்களும், பதினெட்டுவிதமா யிருக்கின்றன. இந்த சித்தாந் தங்களில், சூரிய சித்தாந்தமே, அனுபவத்துக்கு ஒற்றுமையா யிருக்கின்றது. அடியேனும் சிலவருஷங்களாய் வாக்கியத்தைக்கொண்டு, ஜாதகங்களும், மற்ற விஷயங்களும் கணித்து உபயோகப்படுத்தி வந்ததில் பலாபலன்கள் வித்தியாசமாயிருப்பினும் என்னுடைய உபாஸனாதேவதையாகிய ஸ்ரீ சிவசுப்ரமண்ணியருடைய அனுக்கிரஹத்தினால் ஜனங்களின் மனதுக்கு இன்பமாய் நடைபெற்று வந்தன.

2-வது. பஞ்சாங்கத்தினுடைய வித்தியாசத்தை நிர்ணயிக்க வேண்டியதாய் இருந்தால், ஆரூடபிரசனை சொல்வதால் தெரிந்து கொள்ளலாம்.

8-வது. கும்பகோணத்துப் பஞ்சாங்க சந்தேக விளம்பரம். இவ்விரு

இறத்துப் பஞ்சாங்கங்களில் எது சாஸ்திர சம்மதமான தென்பதைப்பற்றி சென்ற ஆங்கிரஸஞூத்தில் கும்பகோணம் ஸ்ரீ ஜகத்குரு சங்கராச்சாரிய சுவாமிகள் சந்நிதானத்தில் அனேக சோதிடசாஸ்திர பண்டிதர்கள் வியாகரண சாஸ்திர பண்டிதர்கள் மற்ற கல்விமான்களான மஹாஜனங்கள் கூடிய சபையில் வாதம்செய்யப்பட்டு வந்ததில் வெகுஜன சம்மதமாக சுத்த திருக்கணித பஞ்சாங்கமே சாஸ்திரியமானதென்றும், வாக்கிய பஞ்சாங்கம் சாஸ்திரத்திற்கு விரோதமானதென்றும் தீர்மானிக்கப்பட்டது. ஆகையால், பாலஜோதிஷம் விருத்தாப்பிய வயித்தியம் என்று சகலரும் வழங்கிவருகின்றனர். இந்த விஷயம் அவரவர்களே தெரிந்து கொள்ளும் படியானது.

பாலவயதுள்ள, ம-ா-ா-ஸ்ரீ C. G. ராஜன் B. A. மஹா சிரமையுடன் கணித்துவரும் ஆனந்தபோதினி சர்வமுகூர்த்த சுத்த திருக்கணித பஞ்சாங்கம் சிறுவர்முதல் முதியோரும் உபயோகிக்கக்கூடிய பஞ்சாங்கமாயிருக்கின்றது. ஆகையால் இந்த சுத்ததிருக்கணித பஞ்சாங்கத்தை சகலபண்டிதர்களும் ஜோஸியர்களும் கையாண்டுவருவார்களாகில் தினேதினே சாஸ்திர விருத்தியாகி சகலருக்கும் நன்மை உண்டாகுமென்று கோருகிறேன்.

வே. நா. முனிசாமி முதலியார், சுப்ரமண்ணிய உபாசி,
அக்கிப்பேட்டை, பெங்களூர் சிட்டி.
ஸ்ரீ சுப்ரமணியபராக்கிரம ஜோதிஷ வயித்தியசாலை.

குறிப்பு :—ஆனந்தபோதினி பஞ்சாங்க விஷயமாய்ப் பலரிடமிருந்து நல்ல அப்பிராயங்கள் வந்துகொண்டிருக்கின்றன. அவற்றை எல்லாம் ஏககாலத்தில் பிரசுரிக்க ஆனந்தனில் தற்போது இடமில்லை. இடங் கிடைக்கும்போது ஒன்றின்பின் ஒன்றாக அவை வெளியிடப்படும்.

பத்திராசிரியர்.

---

## மாதர் நீதி மஞ்சரி.

(309 - ம் பக்கத் தொடர்ச்சி.)

### கற்பிலக்கணம்.

இதுவரையில் மாதர் கடமையைச் சுருக்கமாகக் கூறினோம். அக்கடமைகளுக்குள் கற்பும் ஒன்றாகையால், முன்னே கற்பின் அவசியத்தைப் பற்றி மாத்திரம் சுருக்கமாகக் கூறினோம். ஆயினும் அது மிகவும் முக்கியமான விஷயமாகையால் தனியே விவரித்து இங்குக் கூறுதலவசியமாகும். இங்குக் கூறப்படும் கற்பிலக்கணம் 'காசிகண்டம்' என்னும் நூலில், கற்பிலக்கணங் கூறிய அத்தியாயத்தைத் தழுவி எழுதப்படுகின்றது. ஆகவின் சகோதரிகள் தங்களுக்கு உயிர்போன்றதாகிய இக்கற்பினிலக்கணத்தை நன்குணர்ந்து அதன்படி ஒழுகுவாராயின் இம்மையிற் புகழும் மறுமையில் முத்தியும் சித்திக்கும்.

நாயகன் உணவுகொண்டபிறகு தான் உண்ணலும், அவன் நித்திரை



செய்தபின்பு தான் நித்திரை செய்தலும், அவன் நித்திரை நீங்கி எழுந்திருப்பதற்கு முன்னமே தான் நித்திரையினின் றெழுந்திருப்பதும் கற்புடைய பெண்ணின் இலக்கணமாம். தூங்குங் காலத்திலும் மட்டித்தூக்கம் தூங்கலாகாது; கணவன் எச்சமயத்தில் எழுப்பினாலும் உடனே விழித்துக்கொள்ளும்படி மிருதுவாகத் தூங்கவேண்டும். திருவள்ளுவர் மனைவியாகிய வாசுகி இப்படித்தான் நடந்துகொண்டிருந்தார். அவ்வம்மையார் இறந்தபிறகு அவர் கணவர் விசனித்துப் பின்வருமாறு பாடுகிறார்.

அடிசிற் கினியாளே அன்புடையாளே
படிசொற் றவறாத பாவாய்—அடிவருடிப்
பின்தூங்கி முன்னெழுந்த பேதையே போதியோ
என்தூங்கு மென்க ணிரா.

இவரல்லவா உத்தமி! கற்புக்கரசி. மேலும், கற்புடைய மாதர் தங்கள் கணவர் வீட்டிலிருக்குங்காலத்தில், அவர் கண்டுகளிக்கும்படி தம்மை ஆடை அணிகளால் அலங்கரித்துக்கொள்வர். கணவர் வெளியிற் சென்றிருந்தால் அவ்வாறு அலங்கரித்துக்கொள்ளார். (இதைக்குறித்து முன்னே "திரௌபதியும் சத்தியபாமையும்" என்ற பாகத்தில் விளக்கமாக எழுதப்பட்டது.)

ஏதேனுமொருகாரணத்தால் கணவர் கோபித்துக்கொண்டால், தாமும் அவரெதிரில் நின்று மனவெறுப்புடன் பேசலாகாது. தங்கள் வீட்டைவிட்டு வெளியில் செல்லலாகாது. அவ்வாறு வெளியில் செல்லும் பெண்களின் முகத்தைப் பார்க்கவும் கற்புடைய மாதர் மனங் கூசுவார்கள். கற்புடைய பெண்கள் தங்கள் கணவர் வந்து ஏதாவதொரு காரியத்தைக் குறித்து 'அதைச் செய்தீர்களா?' என்று கேட்டால், 'செய்துவிட்டோம்' என்று சொல்லுவார்கள். திருவிழா முதலிய வேடிக்கைகளைப் பார்த்தல், அரிய விரதங்களை யனுஷ்டித்தல், புண்ணிய தீர்த்தங்களில் முழுகுதல், தேவர்களை வணங்கித் துதித்தல் முதலியவற்றைக் கணவனுத்தரவின்றிச் செய்யமாட்டார்கள். தமது ஆபரணம் முதலானவைகளைக் கணவர் வேறு மாதர்களுக்குக் கொடுத்தால் கோபிக்கமாட்டார்கள். முதுமைப் பருவமுள்ளவர்களில்லாத வேற்றிடங்களுக்குச் செல்லார். அயலார் வீட்டினுள் நுழையார். நாயகனுடைய ஆயுட்காலம் குறைவுபடுமாகையால் அவன் பெயரை மனைவி சொல்லலாகாது. நாயகன் உட்கார்ந்த பின்பு மனைவி உட்காரவேண்டுமேயல்லாமல் அவன் நின்றுகொண்டிருக்கும்போது தான் உட்காருதல்கூடாது. கணவனது மிச்சிலைப் புசிப்பதில் அருவருப்படையலாகாது. கற்புத்தன்மையுடைய பெண்கள் தமது நாயகரது கிருபையால் துறவிகளுக்கும், சுற்றத்தாருக்கும், ஏவலாளருக்கும், குலதெய்வத்திற்கும், பசுக்களுக்கும், விருந்தினருக்கும், தமது வமிசத்தில் இறந்துள்ள பிதூர்களுக்கும் பாகித்து உண்ணுவார். இது இல்லறத்தாரது கடமை. தங்கள்

வயிற்றை மாத்திரம் நிரப்பிக்கொள்ளுதல் இல்லறத்தார் கடமையல்ல. இல்லறத்தார் கடமையை நாயனார்,

துறந்தார்க்குந் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வா னென்பான் துணை.
தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு
ஐம்புலத்தா றோம்பல் தலை.
இல்வாழ்வா னென்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றி னின்ற துணை.

என்னும் குறள்களால் விளக்கி யிருத்தலைக் காண்க.

"கொண்டான் குறிப்பறிவாள் பெண்டாட்டி' என்றபடி, கணவனுக்கு ஆகவேண்டிய காரியங்களை அவன் சொல்லாததற்கு முன்னமே குறிப்பறிந்து செய்வதே மனைவிக்கு அழகாகும். தனது நாயகனது குற்றங்களைப் பலருமறியும்படித் தூற்றுபவள் நல்ல மனைவியாகமாட்டாள். அவளே அவனுக்கு எமன். "தூற்றும் பெண்டிர் கூற்றெனத் தகும்." உத்தம ஸ்திரீகள் அவ்வாறு தூற்றும் பெண்களின் முகத்தையும் பார்க்கமாட்டார்கள். "தீயாரைக் காண்பதுவும் தீதே" யல்லவா? கணவனது வரும்படியைக் கொண்டு இல்வாழ்க்கைக்கு வேண்டியவற்றைப் பாதுகாத்துச் சேர்த்து வைப்பார்கள். மஞ்சளை முகத்தில் பூசிக்கொள்வதால் கணவனுக்கு ஆயுள் விருத்தியுண்டாகுமாகையால், உத்தம ஸ்திரீகள் அழகிய மஞ்சளைப் பூசுவார்கள். "கற்பெனப்படுவது சொல்திறம்பாமை," ஆகையால் பதிவிரதைகளுக்கு நாயகனது உத்தரவை மீறி நடவாமல் அவர் உத்தரவின்படி நடப்பதுதான் நல்ல தருமமும், தவமும், கடவுள் பூசையுமாகும். கணவன் சிறிதும் அழகில்லாதவனாயினும், மிக்க வியாதியாளனாயினும், விருத்தாப்பியனாயிருந்தாலும் குற்றஞ் சொல்லாமல் அவனொடு பொருந்தி வாழ்வார்கள் நற்குணமுள்ள நாரியர்.

கொண்ட கணவன் குரூபியே யானாலும்
பண்டுதான் செய்த பலனெனவே—கண்டுகொண்டு
குற்றமென எண்ணிமனம் கோணா தவன்பணியைப்
பற்றியிகச் செய்வார் பரிந்து

என்பது பெரியோர் வாக்கியம். நளாயனியே இதற்கு சாக்ஷி.

நாயகன் நித்திரை செய்தால் தாமும் நித்திரை செய்தலும், அவர் வருத்தமடைந்தால் தாமும் அவர்போல் வருத்தமடைதலும், அவர் சந்தோஷமடைந்தால் தாமும் சந்தோஷத்தோடிருத்தலுமே கற்புடைய காரிகையர்க்குப் பெரிய தவமாம். பெண்களுக்குக் கணவனே கடவுள். "குலமகட்குத் தெய்வம் கொழுநனே" என்று குமரகுருசுவாமிகள் கூறியுள்ளார். அவ்வாறு நினைத்தொழுகும் கற்புடையவள் நினைத்தால் முடியாத காரியமொன்றுமில்லை. பெய்யென்றால் மழை பெய்யும். மற்றும் எவ்வகைக் காரியமும் முடியும். இதனால்தான் "தெய்வந்தொழாஅள் கொழுநற்



றொழுதெழுவாள், பெய்யெனப் பெய்யும் மழை" என்று பொய்யாமொழியார் புகன்றனர். மாசருதுவை யடைந்திருக்குங் காலத்தில் விலகியிருக்கும் மூன்று நாட்களிலும் தங்கள் முகத்தைக் கணவருக்குக் காட்டாமலும், தாங்கள் பேசும் வார்த்தை அவர் காதில் படாமலுமிருந்து, நான்காம் நாள் நீராடியபிறகு அவர்களது முகத்தைப் பார்த்துப் பேசுவது பெண்களது ஒழுக்கமாம். புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானம் செய்யும்பொழுது நாயகர் வேற்றூருக்குச் சென்றிருந்தால் அவரை அன்போடு மனத்திலெண்ணி நீராடிச் சூரியதரிசனம் செய்யவேண்டும்.

மாமன் மாமிகளெதிரில் சிரித்துப் பேசலாகாது. சாப்பிட்டுக்கொண்டிருக்கும்போது கணவன் கூப்பிட்டால் உண்பதை விட்டு ஆவலுடன் அவரண்டையிற் செல்லவேண்டும்.

"திருவள்ளுவ நாயனார் மனைவியாராகிய வாசுகி ஒருநாள் கிணற்றில் நீர் சேந்திக்கொண்டிருக்கையில் நாயனார் அழைத்தார். அவர் அப்படியே நீர்க்குடத்தை விட்டுவிட்டு வந்துவிட்டார். மறுபடியும்போய்ப் பார்க்கும்பொழுது அந்தக் குடமானது விட்டுவந்த விதமாகவே பாதிக் கிணற்றில் தொங்கிக்கொண்டிருந்தது," என்பதாகச் சரித்திரமுண்டு.

பெண்கள் தங்கள் தந்தை, தாய், குரு, பிள்ளைகள் இவர்களைவிட நாயகனிடத்தில் மிகுந்த ஆசையுடையவராய் மகிழ்ந்திருத்தலவசியம். உரலின்மேலும், அம்மியின்மேலும், உலக்கையின்மேலும், வாயிற்படியின்மேலும், முறத்தின்மேலும் உட்காரலாகாது. அப்படிச் செய்தால் செல்வம் நீங்கி வறுமை ஓங்குமென்று பெரியோர் சொல்வர். தமக்குரிய கணவரை மனம்விரும்பி வணங்காமல் விரதங்களையும், தேவபூசைகளையும் செய்யும் பெண்கள் எமதூதர்களால் தண்டிக்கப்பட்டு எரிகின்ற அக்கினிமயமாகிய நரகத்திற்கிடந்து வருந்துவார்கள். கணவர் செய்த குற்றங்களை அயலார் அறியும்படிச் சொல்லும் பெண்களும், அவரோடு கோபித்து எதிர்வார்த்தை சொல்லும் பெண்களும் மறுபிறப்பில் நரியாகவும் நாயாகவும் பிறப்பார்கள். நாயகன் கோபித்தால் அவரை நெருங்கி அவருக்கு முன்னே கோபித்துத் திட்டுகின்ற பெண்கள் மறுபிறப்பில் புலியாகப் பிறப்பார். சக்களத்தியை மனம் வருந்தும்படி கோபித்துத் திட்டுவோர் கோட்டானாகப் பிறந்து வருந்துவார்கள். அன்னிய புருஷருடைய மிகுந்த அழகைக்கண்டு அவர்மீது ஆசைகொள்ளும் பெண்கள், துன்பம்செய்து உழலுகின்ற பேய் வடிவத்தை யடைவார்கள். தமது கணவர் பசியோடிருக்க அவருக்கு முன்னே உண்ணும் மாதர் பன்றியாவார். (தொடரும்.)

பூ. ஸ்ரீநிவாசன். தமிழ்ப்பண்டிதர், சித்தூர்.

---

சந்தாதாரர்களுக்கு—சந்தா நம்பர் தெரியாதவர்கள் மாத மாதம் வரும் சஞ்சிகையின் மேலுள்ள விலாசத்தில் குறிக்கப்பட்டிருக்கும் நம்பரைப் பார்த்து குறித்து வைத்துக்கொள்ள வேண்டுகிறோம்.

## சுகவழி 80.

### 1. காற்றியல் 20.

(1) அசுத்தக் காற்றே நசுக்குங் கூற்று.
(2) கெட்ட குப்பையை எட்டக் கொட்டுக.
(3) மாட்டுக் கொட்டாய் வீட்டிற் கட்டேல்.
(4) புறக்கடை அசுத்தம் அறக்கழித்திடுக.
(5) பள்ளிபு ளட்டிலில் பாத்திரம் நிறுவேல்.
(6) வீட்டுமுன் மலஜலம் விலக்குதல் கூடா.
(7) பழையன அழுகல் கழிவன எறிக.
(8) படுக்கும் அறைக்குள் தானியம் பரப்பேல்.
(9) நித்திரையறையுட் சிறிதொளி வேண்டும்.
(10) சாளரங் கபாடந் தனைப்பகல் மூடேல்.
(11) பனியிற் கதவம் பரப்புதல் வேண்டா.
(12) காற்றிலாச் சிறுவீடு ஏற்புடைத்தன்று.
(13) எதிர்காற் றடிக்கும் இடந்தனிற் படுக்கேல்.
(14) திறந்தன வெளிகளில் உறங்குதல் தீது.
(15) சிசுக்களைத் தரையிற் கிடத்துதல் தவறு.
(16) போர்த்துக் குழந்தையைப் போற்றலே மாண்பு.
(17) முகம்மூடி யுறங்குதல் மூதேவி லக்ஷணம்.
(18) காலையிற் போர்த்தே வேலைக்குப் போக.
(19) கூட்டத்து நடுவில் குழுமி யிராதே.
(20) வீடும் பிறவும் நீடுசுத் தஞ்செய்.

### 2. நீர் நெறி 20.

(1) பரிசுத்த நீரே பருகுதல் வேண்டும்.
(2) காய்ச்சா றினநீர் கரும்பினு மினிது.
(3) ஆற்றுப் புதுநீர் அன்றே நோய் தரும்.
(4) உண்ணுமுன் சிறிதுநீர் உட்கொளல் முறைமை.
(5) சோடாக் குடியைத் தொலைப்பதே மேன்மை.
(6) மதுபா னஞ்செயின் மதியார் மதியார்.
(7) தேநீர் காப்பியைத் தீண்டலுங் கொடிது
(8) கெட்டிக் கஷாயங் கட்டறுத் தவிடும்.
(9) சிவக்கக் காய்ச்சிய பாலே சிறந்தது.
(10) கலிவுடைப் பாலகர் நடுங்கி விரும்பின்
தெண்ணீர் அருத்தலே செய்யத் தக்கது.
(11) ஒன்பது மாதமும் குழந்தைகட் குணவு
தம்தாய்ப் பாலே தருமென் றறிக.
(12) தண்ணீர்க்கு ரோதனந் தகாது பாலகர்க்கே.



(13) வெள்ளத்து நீரினில் விழுந்துழ லாதே.
(14) அசுசிநீ ராயின் அருவருப் படைக.
(15) நல்லதண் ணீரினை நாற்றஞ் செய்யேல்.
(16) மலஜலங் கழித்தல் கரைமீது அல்ல.
(17) நீர் கசியும் இடம் நிற்பதுந் தவறு.
(18) குடுவையிற் குடிநீர் கொள்ளுதல் வேண்டா.
(19) தெள்ளிய நீரைத் திறந்து வைக்காதே.
(20) கெட்ட எந் நீரையும் கிணற்றினுட் கொட்டேல்.

### 3. உணவுமுறை 20.

(1) வேகா எவையும் ஆகா வுணவே.
(2) அழுகிய, இழிவ, அருந்துவ தொழிக.
(3) பலந்தரும் உணவே நலந்தரு மமுதம்.
(4) கலப்பு செய், எண்ணெய் விலக்குதல் நன்மை.
(5) திறந்தன பண்டந் தீண்டலும் வேண்டாம்.
(6) கனியாப் பழவகை தணியா நோய்தரும்.
(7) நன்றாய் மென்று தின்றலே நன்று.
(8) தாய்ப்பால் போன்றதே சேய்ப்பால்; அமுதம்.
(9) தினமும் மும்முறை புணவே சாலும்.
(10) அளவுக்கு மிஞ்சின் அமுதமும் விஷமே.
(11) மாசுள பதார்த்தம் வீசுதற் குரியதே.
(12) வேளையி லுண்டல் சாலவும் நன்று.
(13) வெறுஞ்சோ றின்றி நறுஞ்சுவை கலந்துண்.
(14) அவசரத் துண்ணல் ஆரோக்ய மன்று.
(15) இரவி லுண்பவை இலேசா யுண்க.
(16) பக்ஷத் தொருநாள் பட்டினி கிடக்க.
(17) பூனைநாய் காணப் போசனம் வையேல்.
(18) ஈ மொய் பண்டம் எதனையும் விரும்பேல்.
(19) ஆறின பண்டம் அகற்றுதல் நன்று.
(20) புதுத் தானி யங்களைப் பொறுத்து உபயோகி.

### 4. பொது விதி 20.

(1) காலையிற் குளித்தல் சாலச் சிறப்பு.
(2) சுத்த ஆடையே சுக ஆதாரம்.
(3) அழுக்குத் தலைவிரி அவலக்ஷணமாம்.
(4) கல்கரி மணலால் பல்துலக் காதே.
(5) காதையும் நாசியும் கண்ணெனக் கருது.
(6) இரவில் விழிப்பு விரைவில் நோய்தரும்.
(7) நாடக சாலையை நாடுதல் வேண்டா.
(8) தீயவை பழகில் "நாய்" என வெறுப்பர்.

(9) இருட்டினுந் தூரமுஞ் செருப்பணிந் தேகு.
(10) இரவில் தூக்கம் எண்மணி நேரம்.
(11) போசன முடிந்து நீ ஜல மாடேல்.
(12) உண்டதும் படுக்கை கொண்டிடல் தவறு.
(13) வாய்திறந்து உறங்கல் நோய்தரும் மார்க்கம்.
(14) களைப்பு இல்லாவிடில் பகல்துயில் களைக.
(15) நடுப்பகல் தன்னில் தலைக்கு இட்டு ஏகுக.
(16) தேகப் பயிற்சியைத் திட்டமுற நாடுக.
(17) நோயாளிக ளெனில் பேய் என விலகுக.
(18) களியாட் டங்களைக் கனவினுங் கருதேல்.
(19) நன்னடை யொழுங்கிற் பின்னடைந்து ஒழுகேல்.
(20) சுத்தமுங் கடவுளைத் தொழுதலும் மறவேல்!

வாழ்வுஞ் சுகமும் வயதும் நீடிக்கும்
தாழ்விலா எண்பதுஞ் சார்ந்துகைக் கொளினே.

சுகவனம்-சிவப்பிரகாசன், தமிழ்ப்பண்டிதர்,
காவேரிப்பட்டணம், சேலம் ஜில்லா.

---

## நாலடியார் வசனம்

(269-ம் பக்கத் தொடர்ச்சி.)

### 15-ம் அதிகாரம். குடிப் பிறப்பு.

சிங்கமானது தனக்கு (பசியினாலாகிய) துன்பம் மிகுதியாய் உண்டானாலும் கொடியாகப் படர்ந்திருக்கும் புல்லைத் தின்னுமோ? (தின்னாது). (அதுபோல) நல்ல குலத்தில் பிறந்தவர்கள் (வறுமையினால்) உடுக்கப்படும் ஆடை கெட்டுச் சரீரம் அழிந்தாலும் தங்கள் நன்னடக்கையிற் குறைவு படார். (1)

ஆகாயத்தை யளாவி மேகங்கள் தவழ்கின்ற மலையையுடைய அரசனே! பெருந்தன்மை, சாந்தகுணம், நன்னடக்கை என்னும் இம் மூன்று குணங்களும் பெருமைபொருந்திய நற்குடியிற் பிறந்தார்க்கு உண்டாகுமே யல்லாமல் மற்றவர்களுக்குப் பெரிய செல்வம் வந்தாலும் உண்டாகமாட்டாவாம். (2)

நற்குடியில் பிறந்தவர்கள் பெரியோரைக் கண்டால் இருப்பிடத்தை விட்டு எழுந்து நிற்றலும், எதிராகச் செல்லலும், இன்னமும் அப்பெரியோர்கள் திரும்பிப்போகும்பொழுது (அவருடன் சென்று) அவர் விடை கொடுக்கத் தாம் (அவரை விட்டுப்) பிரிதலும் (ஆகிய) இத்தன்மையான செய்கைகளைக் குறைவுபடாத ஒழுக்கமாகக் கொண்டவர்களாவார்கள். (இக் குணங்கள்) கீழ்மக்களிடம் பொருந்தியிரா. (ஆதலால் அத்தகைய நற் குலப் பிறப்புடையாரை) கீழ்மக்களோடு ஒரு தன்மையாக வைத்து எண்ணுதல் தகுதியன்று. (3)



நன்மையான காரியங்களைச் செய்தல் இயல்பாகும். தீய காரியங்களைச் செய்தல் பலரும் தூற்றும் பழிப்பாகும். (ஆதலால்) நற்குணமெல்லாம் அறியும் உயர்குடிப் பிறப்பு (முன்னைய நல்வினையால் ஒருவர்க்குவந்து) கூடினால் அதைவிட லாபகரமானது வேறென்ன இருக்கிறது? (4)

(கல்வி) கல்லாமையாலுண்டாகும் அச்சம் உள்ளது. கீழ்மக்களுக்குரிய தொழில்களைச் செய்வதாகிய அச்சம் உள்ளது. (பொய், கோள், கடுஞ்சொல் முதலிய நீசசொற்களைச்) சொல்லாயவிருப்பதிலும் (எந்த இடத்தில் எப்பொழுது தவறு நேரிடுமோ என்று) ஒரு தளர்ச்சிக்கு அஞ்சுதல் உள்ளது. எல்லாவற்றையும் இரக்குந்தன்மையுள்ள யாசகருக்குச் சிறிதும் கொடுக்காமலிருப்பதாகிய அச்சம் உள்ளது. (ஆகையால், இவ்வித அச்சங்களை யடைதற்குக் காரணமான) மாட்சிமைப்படாத இத்தகைய உயர்குடியிற் பிறந்தவர்கள் மரக்கலத்தில் உள்ளவர்களைப்போல எப்பொழுதும் அச்சமுடையவர்களே யாவார். (5)

பொன்னும் இரத்தினங்களும் முத்துக்களும் பிரகாசிக்கும்படியான முழங்குகின்ற குளிர்ந்த கடலினது கரையையுடைய பாண்டியனே! நல்லினத்தாரோடு சேர்ந்திருத்தலும், இனிய சொற்களைச் சொல்லுதலும், (தம்மால் கொடுக்கக்கூடிய) ஒரு பொருளைத் (தம்மிடம் வந்து யாசிப்பவர்க்குக்) கொடுத்தலும், மற்றுமுள்ள மன நன்மைகளுமாகிய இவைகளெல்லாம் உயர்குடியில் பிறந்தவரிடத்தே இருக்கின்றன. (6)

(ஒரு) பெரிய வீடானது கட்டுக்குலைந்து கறையானால் அழிக்கப்பட்டிருந்தாலும், ஒழுக்கில்லாத ஒருபக்கத்தை யுடைத்தாயிருக்கும். (அதுபோல) நற்குடியிற் பிறந்தவர்கள் துன்பம் அனுபவிக்கும்பொழுதும் தாங்கள் செய்யத்தக்க கடமைகளைச் செய்வார்கள். (7)

ஒரு பக்கம் பாம்பு பற்றினாலும் மற்றொரு பக்கத்தினால் அழகிய இடமுடைய பெரிய பூமியைப் பிரகாசமடையும்படியாகச் செய்கின்ற (பூரண) சந்திரன்போல, உயர்குடியிற் பிறந்தவர்கள் தங்களுக்கு வறுமையானது மிகுதியாக நேரிட்டாலும் (பிறர்க்கு) உதவிபுரிவதற்குச் சோர்வடைய மாட்டார்கள். (8)

மானானது சேணம் முதலியபோர்க் கோலத்தைத் தாங்கினாலும், பாய்ந்து செல்லுந் தன்மையுள்ள குதிரையைப்போல போர்புரியும் வலிமையைப் பெற்றிருப்பதில்லை. (அதுபோல) உயர்குடியிற் பிறந்தவர்கள் (தரித்திரம் முதலியவற்றால்) செய்யமுடியாத காலத்திலும் செய்யும் தரும காரியங்களைக் கீழோர் (செல்வம் முதலியவற்றால்) செய்யக்கூடிய காலத்திலும் செய்வதில்லை. (9)

விசாலமான ஆறானது வற்றிக்கிடக்குங் காலத்திலும் தோண்டினால் தெளிந்த நீரைக் கொடுக்கும். (அதுபோல) நல்ல குடியிற் பிறந்தவர்கள் தங்களிடத்தில் யாதொரு பொருளுமில்லாத (தரித்திர) காலத்திலும்,

வேறு கதியில்லாமல் தம்மை யடைந்தவர்க்குத் தளர்ச்சி நேர்ந்தகாலத்தில் ஊன்றுகோல்போல உதவி செய்வார்கள். ("ஆற்றப் பெருக்கற்று அடி சுடு மந்நாளு மவ்வாறு ஊற்றுப் பெருக்கால் உலகூட்டும்—ஏற்றவர்க்கு—நல்ல குடிப் பிறந்தார் நல்கூர்ந்தா ரானாலும்—இல்லையென மாட்டா ரிசைந்து" என்னும் பாடலின் கருத்தையு மிதனோடு ஒப்பிடுக.) (10)

## 16 - ம் அதிகாரம்

### மேன்மக்கள்—(மேன்மக்களின் தன்மை.)

அழகிய இடமகன்ற ஆகாயத்தில் பரந்த நிலாவை வீசுகின்ற சந்திரனும் பெரியோரும் சமமாவார்கள். ஆனால், சந்திரன் களங்கத்தைத் தாங்கும். பெரியோர்கள் களங்கத்தைப் பொறுக்கமாட்டார்கள். சிறிது களங்கம் (குற்றம்) தம்மை யடையுமாயினும் (அதற்காக) வருந்தி அழிந்துவிடுவர். (1)

பெரியோர் பிறரால் பொருள் கிடைத்தாலும் கிடையாவிட்டாலும் குற்றம் நினையார். விசையால் கரியின் நெஞ்சைப் பிளந்த அம்பைவிட சிங்கமானது (குறித்த இலக்குத்தவறிப்) பிழைக்கும்படி தொடுத்த அம்பு நீமையுடையதாகுமோ? (ஆகாது) (2)

(உணவில்லாமையால் உடம்பு மெலிய அதனால்) நரம்புகள் மேலே தோன்றி வறுமைப்பட்டாராயினும் பெரியோர்கள் (நல்லொழுக்கத்தின்) வரம்பினின்றுங் கடந்து குற்றமான காரியங்களில் அதிக்கிரமித்து நடவாமல், (தமது) அறிவைக் கருவியாகக்கொண்டு முயற்சியென்னும் நாரினால் மனதைக் கட்டி, தமக்குள்ள பொருளளவிற்குத் தக்கபடி செய்யத்தக்க தருமங்களைச் செய்வார்கள். (3)

பெரியோர் தாங்கள் போகும் வழியில் ஒருநாள் (ஒருவரைச்) கண்டாலும், பழைய வழியால் வந்த சிநேகம்போலக் காணப்படும்படி விரும்பி அவரைச் சிநேகிப்பார்கள். கல்ல மலைகளைக்கொண்ட பாண்டிய நாட்டையுடையவனே! கல்மலையில் சிலகாலம் காலடிபட்டால் வழியுண்டாய்விடும்.

இலக்கணநூலைப் பொருந்தாததும் அர்த்தஞான மில்லாததுமாகிய மூடர் சங்கத்தில், கல்வியில்லாத ஒருவன் ஒன்றைச் சொல்லக்கேட்டு வருத்தமடைந்தும், மேன்மக்கள் அவனிடத்துத் தயை தாக்ஷிண்யங்கொண்டு, அவ்வறிவில்லாதவன் பலபேர் முன்னிலையில் அவமானப்படுவதற்காக மனமிரங்கிக் கேட்பார்கள். (5)

கரும்பைத் துண்டு துண்டாகத் தரித்து (அதன்) கணுக்கள் நொறுங்கும்படி ஆலையிலிட்டாட்டி நசுக்கி இரசத்தைக் கொண்டாலும் (அக்கரும்பு) இனிய மதுரமுடையதேயாகும். (அதுபோல) நற்குடியிற் பிறந்தோர் (தம்மைப் பிறர் தமது) குற்றந் தோன்றும்படி திட்டிப்போனாலும் தம் நற்குணங் கெட்டுத் தம் வாயால் அவரைத் திட்டமாட்டார்கள். (6)

குற்றமற்ற அறிவையுடைய மேன்மக்கள் திருடார். கள்ளைக் குடியார். (நூல்களால்) விலக்கப்பட்ட தீச்செயல்களை வெறுத்துச் செய்யாதொழி



ந்து, பிறரை அவமதித்து நிந்தித்துப் பேசார். மறந்தும் (தம்) வாயால் பொய் சொல்லார். (தரித்திரம் முதலியவற்றால்) தளர்ச்சி நேர்ந்த காலத்தும் வருந்தமாட்டார். (7)

(ஒருவன்) அன்னியருடைய இரகசியத்தை யறிவதில் செவிடனாகவும், நல்லொழுக்கத்தின் வகையை யறிந்து அயலார் மனைவியரைக் காதலோடு காண்பதில் குருடனாகவும், கொடிய புறங்கூறுவதில் ஊமையாகவும் இருப்பானானால் அவனுக்கு எந்தத் தருமமும் (பிறர்) உபதேசிக்கவேண்டியதில்லை. (8)

மேன்மைக் குணமில்லாதவர்கள் (தம்மிடத்தில் பிறர்) பலமுறை வந்தால் (இவர்கள் நம்மிடத்தில்) யாதாயினும் விரும்பிக் கேட்பரென்றெண்ணி அவரை (உபேட்சை செய்து) இகழ்ச்சி செய்வார்கள். பெரியோர் (பிறர்) யாதாயினும் விரும்பினாலும் நல்லதென்று சொல்லி (அவர்களைக் காணும்பொழுதெல்லாம் அவர்களுக்குச்) சிறப்புச் செய்வார். (9)

சிலர், இவர் செல்வமுள்ளவரென்றெண்ணி ஒரே துணிவாய்ப் பிடித்துக் கீழ்மக்களின் பின்சென்று வாழ்வார்கள். (இது தகாத செய்கையாம்.) நல்ல குலத்திற்பிறந்த மேன்மக்களைச் சேர்ந்தால் (வேண்டும் பொருள்களெல்லாவற்றையும்) உடையதொரு சுரங்கம் கிடைத்துவிட்டதுபோலாகாதா? (தொடரும்.) (10)

பூ. ஸ்ரீநிவாசன், தமிழ்ப்பண்டிதர், சித்தூர்.

---

## ஆரிய சித்தாந்தம்.

### (சர்வசக்தி.)

(301-ம் பக்கத் தொடர்ச்சி.)

இவ்வாறு சிற்சடபேத பிரபஞ்சம் முழுமையும் நிறைந்து நிற்பது சர்வசக்தி. இந்தச் சக்தி என்பது குணம் என்றும் கூறப்படும். இதனை உரிமையாகக்கொண்ட பொருள் பிரமமென்றும், சத்து என்றும், சிவமென்றும் கூறப்படும். இதனாற் சக்தி சிற்சக்தி ஜட சக்தி என்று இருபாலாகும். இது "சிற்சக்திச் சேதனரூபா ஜடசக்திர்ஜடாத்மிகா" என்று சிவ சக்தியாகிய உமாதேவியாரை நூல்கள் புகழ்ந்து கூறியதனால் விளங்கும். சக்தியாகிய குணம் பொருளை விட்டுத் தனித்து நில்லாது. பொருளும் சக்தியைவிட்டுத் தனித்து நில்லாது என்பது பிரத்தியட்சம். ஆதலால் அதனை சக்தி என்றும் சிவமென்றும் கூறலாம். இவ்விரண்டும் ஒன்றாய்க் கூடியிருப்பதே ஆனந்தமாம். இதனை "மூலமணி பூரகத்தோடிலிங்கமார்பு, முதுகளம்விற் புருவாடு மொழிவதாறு, ஞாலமுமென்புனலு மனற்பிழம்புங் காற்றும், நாதமுறு பெருவெளியுமனமுமாக, மேலணுகிக் குளபதத்தைப் பின்னிட்டப்பால், மென்கமலத்தாயிரந்தோட்டருணபீடத், தானந்தமுறும் பொருளையறியலாமே" என்று கூறிய யோகநூற் பிரமாணத்தாலுணரலாம். சத்துக்கு ரூபம் ஒளி. அதுவே ஞானமெனப்படும். அதுவே அக்கினியுமாம்.

சக்தி குணமாதலால் அது வண்ணம் வடிவு பண்பு தொழில் என நாலு வகையாயிருக்கும். வண்ணமென்பது வெண்மை, கருமை, செம்மையாதிகளாம். வடிவு வட்டம், கோணம், குட்டை, நெட்டை முதலியவாம். பண்பு இனிப்பு, புளிப்பு முதலியவாம். உலகத்தில் காணப்படும் பொருள்கள் எல்லாம் சத்து சித்து ஆனந்தமயமான பிரமரூபமேயாமென்று வேதங் கூறிய உண்மை இதனால் விளங்கப்பெறும். எவ்வாறெனில் புலன்களால் அறியப்படுதலால் சத்தாம் (உண்மையாம்). அறிவுக்குப் புலப்படுதலால் சித்தாம். மனதுக்கு மகிழ்ச்சிதருதலால் ஆனந்தமாம். ஆதலால் பிரபஞ்சமெல்லாம் பிரமசொரூபமேயாம். அது புலப்படாமையேன் எனில், ஜடவடிவமான மாயாகரணங்களுக்குப் புலப்படாமையே அதனியல்பாம். ஆதலாற் புலப்படுவதில்லை. மாயாபரிணாமமான ஜடப்பொருளே புலப்படும். அவையெல்லாம் சக்தியின் கூறும். மாயையும் சுத்தம் அசுத்தமென விருவகையாம். சுத்தமாயா சொரூபமும் ஞானமெனப்படுதலால் மலரகிதமான அந்தச் சொரூபமும் அசுத்தமாயாகருவிகளுக்குப் புலப்படாது. ஆதலாற்றான் சிவவிஷ்ணுவாதி சுத்தமாயா சொரூபங்களும் ஊனக்கண்களாற் காணக்கூடாமலிருக்கின்றன. இதனால் சர்வ சக்தியாகிய பிரமசொரூபம் மாயைகளைக் கடந்துள்ளதென்பது விளங்கும். இயக்கமாதிகளாலேயே தெய்வவுண்மை காணவேண்டும். இயக்கல், நிறுத்தல், இழுத்தலென்பன இச்சை ஞானம், கிரியை என்னும் தெய்வ சக்திகளென்று முன்னரே கூறினோம்.

ஆயின் பிரமசொரூபம் எவ்வகையிலும் காணக்கூடாததேயாம். காணக்கூடாத பொருள் ஒன்று உண்டென்று கொள்வது எவ்வாறடுக்கும் எனின், ஒருபோதும் ஒருவிதத்தாலும் காணக்கூடாத பொருள் என்று கூறவில்லை. காண்பதற்குரியதேயாம். ஆனால் அதைக் காணுதற்குரிய முறைமையால் முயற்சித்தால் காணக்கூடும். பிரமசொரூபம் ஞானாக்கினிமயமென்று கூறியன நூல்கள். அவ்வக்கினியே ஜீவ சொரூபங்கடோறும் நின்று இயக்கலாதித் தொழில்களைச் செய்கின்றது. சிவாக்கினி எல்லாப் பொருள்களிலும் நிறைந்து நிற்பதால் உலகங்கடந்த ஞானிகள் ஞானக்கண்களால் கண்டு தரிசிப்பார்கள். சிவசொரூபமாகிய அக்கினி எல்லாப் பொருள்களிலும் நிறைந்து நின்றாலும் சில பொருள்களில் விசேஷமாய்ப் பிரகாசித்துவிளங்கும். சில பொருள்களில் அதிக விளக்கமாயிருப்பதில்லை. அது அவ்வப் பொருள்களின் குணத்தை யனுசரித்ததாம். ஆயினும் சில பொருள்களைக் கைகளால் தேய்த்தால் அக்கினியின் குணமாகிய உஷ்ணத்தைப் பரிசிக்கலாம். சில மரங்களில் கட்டை மேலிட்டுக் கடைந்தால் அக்கினி ஜ்வாலித்து விளங்கும். சக்கி யென்னும் கல்லை மற்றொரு கல்லாலாவது இருப்புக் கருவிகளாலாவது தட்டினால் தீயுண்டாம். இதனால் எல்லாப் பொருள்களிலும் தீ வடிவமான பரம்பொருள் நிறைந்திருக்கிறது என்பதைப் பிரத்தியட்சமாய்க் கண்டறியலாம். சக்கிக் கற்களிலும் வன்னியாதி விருட்சக் கட்டைகளிலும் அக்கினி புறப்படுவது அதை யடைய வேண்டுவதற்குரிய



முறைப்படி முயற்சிசெய்தால்தான். அக்கினி பரிசத்திற்கும் கட்புலனுக்கும் எட்டக்கூடியதாயினும் கட்டையாதிகளில் மறைந்து நிற்கும்போது தொட்டாலும் சுடாது. கண்ணுக்கும் எட்டாது. அதுகொண்டு அவற்றினிடத்தில் அக்கினியில்லை என்று சொல்லக்கூடுமோ? கூடாது. ஏனெனில் அரணிகொண்டு கடைதலாலும், கருவிகளைக்கொண்டு தட்டுதலாலும் அதனுள் மறைந்துகிடக்கும் தீ வெளிப்படுவது தவறுபடுவதில்லை. ஆதலால் அவற்றினுள் அக்கினி உண்டென்று நிச்சயமாகவே கொள்ள வேண்டும் அல்லவா? இவ்வக்கினியே பிராணாக்கினி என்று வேதம் கூறும். இந்தப் பிராணாக்கினியே ஜீவாத்மாக்களை யியக்கும். ஜீவாத்மாவோடு கலந்து நின்று அவை கன்மத்தால் பெற்ற சரீரத்தைப் பரிபாகப்படுத்தும். பரிபாக முதிர்ச்சியால் சக்தி கெட்டுப்போன சரீரத்தை ஜீவாத்மா விட்டு விலகும்போது அந்தச் சர்வ சக்தியும் தன் சக்தியில் அடங்கவிடும். இதனையே மரணமென்று வேதாதி நூல்கள் புகலாநிற்கும்.

அரணிக்குள் தீயைப்போலவே பரமாத்மாவும் ஜீவாத்மாக்களிடம் மறைந்து நிறைந்து நிற்கும். இதயமாகிய கட்டையில் மனமாகிய அரணியை இட்டுப் பக்தியாகிய கயிறு பூட்டிக் கடைந்தால் அவ்விதயத்தில் பரம்பொருளாகிய அக்கினி ஒளிவீசிப் பிரகாசிக்கும். நன்றாய்த் துலக்கி வெண்கல அகலில் திரியும் நெய்யும் பெய்து ஏற்றிய தீபம்போல தவத்தால் மலமாசகன்ற இதய தாமரையில் பரஞ்சோதி களங்கமற்றுப் பிரகாசிப்பதை ஆரியப் பெரியோர் சுயானுபவத்தாற் கண்டு தரிசித்து, அந்த முறையை வெளிப்படுத்தி உலகத்துக்குப் பேருபகாரம் செய்திருக்கிறார்கள். அவர்கள் கூறிய நெறிமுறை தவறாமல் ஜாக்கிரதையாக நடந்தால் நாமும் காண்பதற்கையமில்லை. அப்போது தெய்வமாகிய ஒரு சர்வசக்தி உண்டென்று கொள்வதில் எவரும் ஐயப்படமாட்டார்கள்.

ஒருவன் வழிதெரிந்து முயலாமையால் கண்டறியப்படாதிருக்கிற தெய்வவுண்மை பொய்படுமாறெங்ஙனம்? அறியாமையால் ஒருவன் நான் மாதாபிதாக்களின்றியே தோன்றினேன் என்று கூறிக்கொண்டானாயின் அதனை யெந்தப் புத்திமான் ஒப்புக்கொள்வான்? ஒருவன் ஒரு மாந்தோப்பைக்கண்டு அதிற் சில பழங்களைத் தின்று களித்துவந்து தன் சிநேகிதனுக்கு அத்தோப்பு இருக்கும் இடத்தையும், அதை அடையும் மார்க்கத்தையும் கூறுகிறான். கேட்டவன் அவ்வழியை விட்டு வேறுவழி சென்று பலவிடங்களிலும் அலைந்தும் அந்தத் தோப்பைக் கண்டறியாமல் களைத்துப் பயன் அடையாமற் போகிறான். அதனால் அத்தோப்பு உண்டென்பதைப் பொய்யென்று கொள்வது உசிதமாகுமோ? ஆகாது அல்லவா?

அதுபோலவே முன்னோர்கள் கூறிய நெறியைவிட்டு மாறுவழி சென்றலைந்து களைத்த அன்னோர் கூறியவாறு தெய்வமேயில்லை என்று கூறியதனால் தெய்வமில்லாமற்போய்விடாது. உண்மையானது ஒருபோதும் இல்லாமற்போவதில்லை. உண்மை எப்போதும் உண்மையேயாம். இதுவு

மன்றி யிந்தச் சர்வ சக்தியானது இரச (உருசி) மயமாய் எல்லாப் பொருள்களிலும் கலந்து நிற்கிறது. ஆதலால் இந்த இரசமே பரம்பொருள் என்று கூறுவதும் உண்டு. இதனால் அகண்ட ஏகரசமென்று பரம்பொருளைப் புகழ்வார் பெரியோர். இந்த இரசம் அறுவகைப்படும். உப்பு, உறைப்பு, புளிப்பு, தித்திப்பு, கசப்பு, துவர்ப்பு என்பனவாம். இந்த அறுவகையான சொரூபங்களால் பரம்பொருள் எல்லாப் பொருள்களிலும் வியாபித்து நிறைந்து நின்று ஜீவாத்மாக்களுக்கு உபகரிக்கின்றதென்று சில நூல்கள் கூறும். அதற்கு இரசவைத்திய சாஸ்திரம் என்று பேராம். ஆறு இரசமும் ஏற்றக்குறைவில்லாமல் அவற்றிற்கு ஏற்படுத்தியிருக்கும் அளவு குறையாமல் இருப்பதே நோயற்ற வாழ்வென்றும், ஒன்று குறைந்து ஒன்று மிகுந்தாலும் நோயுண்டாமென்றும் அந்த வைத்தியம் கூறும். ஏறியதை அளவுக்குத் தக்கபடி குறைத்தும், குறைந்ததைச் சரிவர நிரப்பியும் வந்தால் அந்நோய் நீங்கிச் சுகமுண்டாகும் என்று கூறுகின்றது. இன்ன சுவை குறைந்தால் இவ்வகை வியாதி உண்டாகுமென்றும், இது மிகுந்தால் இந்த வகையான நோயுண்டாகுமென்றும் கூறுகின்றது.

இந்த இரசவைத்திய சாஸ்திரம் இக்காலத்தில் காண்பதரிது. ஏனெனில் அதில் பழகுவது கடினமாயிருப்பதனாற்போலும். ஆயினும் யோகப் பழக்க மிகுந்திருக்கும் சில பெரியோர் பரம்பராக் கிரமமாகத் தெரிந்துகொண்டு உபயோகித்து வருகிறார்கள். அவர்கள் நோய்காணுமாயின் மருந்து உண்பதில்லை. அந்நோயின் காரணத்தை உணர்ந்து அதற்குரிய இரசமுள்ள மூலிகைகளைத் தின்று வருகிறார்கள். சாதாரண வைத்திய நூல்களிலும் சில வியாதிகளுக்குச் சுத்தக் கசப்பாகிய வேம்பு முதலிய கஷாயங்களையும், சிலவற்றிற்கு உறைப்பான சுக்குத்திப்பிலியாதி கஷாயத்தையும், சிலவற்றிற்குத் தேன் கரும்பு முதலிய இனிப்பு வஸ்துக்களிட்ட கஷாயத்தையும், சிலவற்றிற்கு இந்துப்பு முதலிய உவர்ப்புக் கஷாயத்தையும், சிலவற்றிற்குத் துவர்ப்பான கஷாயத்தையும் கொடுக்க விதித்திருப்பதும் இந்த இரசவைத்திய முறைபற்றியேயாம்.

இந்தச் சர்வசக்தியென்னும் விஷயம் மஹா சக்தியுள்ள பரம்பொருள் எல்லாப் பொருள்களிலும் கலந்து நின்று பிரபஞ்சத்தில் பஞ்சகிருத்தியங்களையும் நடத்திவருவது என்றும், அது எப்போதும் உள்ள பொருளேயென்றும், முறைப்படி முயன்று கண்டால் அதனை வெளியில் காணலாமென்றும், வேறுவழியாற் காண்பது கூடாதென்றும், அதற்காகவே பெரியோர் நித்தியவிதி முதலாகக் கூறிப்போந்த கன்ம விதிகளையும், ஞான நெறிகளையும் அருளி உபகரித்திருக்கிறார்களென்றும், அந்நெறியே யொழுகி நாமும் நற்கதி பெறவேண்டுமென்றும் விளக்குகின்றது.

சர்வசக்தி முற்றிற்று.

**சிவானந்தசாகர யோகீஸ்வரர்.**

---

## பகவத்கீதை வசனம்.

(312-ம் பக்கத் தொடர்ச்சி.)

பகவான் பின்னுங் கூறுகின்றார் :—

ஏ பார்த்த! யாவர் அசாஸ்திரம்விதித்த கோரமாகிய தவத்தைச் செய்வரோ அவரை அசுர நிச்சயமுடையவரென்று அறிந்துகொள். அதாவது:- இருக்கு முதலிய வேதங்கள் சாஸ்திரமாம்; அவற்றிற்கு வேறானது அசாஸ்திரமாம்; வேதத்தில் விதிக்கப்படாத தவம் அசாஸ்திரம் விதித்த தவமெனப்படும்; வேதவிரோதமாய பௌத்தாகமாதிகளிற் கூறும் காய்ந்த பாறையில் ஏறல் முதலிய தவம், சாஸ்திரமரியாதையைத் தாண்டியதாம்; கோரமாம்; செய்பவனுக்கும் அன்னியருக்கும் இடரையே தருவதாம்; அத்தகைய தவத்தைச் செய்பவர் அசுரரே யென்று சொல்லப்பெறுவர். இதே பிரகாரம், உலகமெல்லாம் என்னைத் தருமாத்மாவென்று சொல்லவேண்டும் என ஆசைப்பட்டுக் கண்டவரிடத்திலெல்லாம் தான் செய்யுந் தருமத்தைப் பேசுதலாகிய இடம்பத்தையும், எல்லாக் குணங்களிலும் யானே யெல்லாரைப்பார்க்கினும் மேன்மையான குணமுடையவன் என்னும் கெட்ட அபிமானமாகிய அகங்காரத்தையும், யாவருடையவரோ அவரும் அசுரர் எனப்படுவர். இச்சிக்கத்தக்கனவாய வீணாகான முதலியவை காமமாம்; அவற்றில் அதிக ஆசையே இராகமாம்; அதுவிஷயத்தில் எத்தனை துக்கம்வந்தாலும் பொறுத்துக்கொள்ளும் சாமர்த்தியமே பலமாம்; அல்லது வீணாகானாதி விஷயங்களில் அதிக ஆசையே காமமாம்; எப்போதும் இவற்றில் அதிக அபிமானம்வைத்து ஏங்குதல் இராகமாம்; இவ்விஷயங்களை நான் எப்படியாவது சம்பாதிப்பேன் என்னும் பிடிவாதமே பலமாம்; இந்த மூன்றோடும் கூடியவரும் அசுரரேயாவர். இந்தக் காரணத்தாலே பலமாகிய துக்கத்தைப் பார்த்தபோதிலும், நீங்காமலே தேகத்திலிருக்கும், தேக அவயவ இந்திரியமனாதி வடிவமான பிருதிவி முதலிய ஐந்து பூதங்களையும், ஆகாராதிகளை அடியோடு வெறுக்கும் வாயிலாக, இளைக்கச் செய்பவர் யாவரோ அவரும் அசுரரேயாவர். இவ்வுடம்பிலே போக்தாவடிவமாக இருக்கும் பரமேசுரராகிய எம்மையும், இவ்வுடம்பையொடுக்கும் வாயிலாக ஒடுக்குபவர் யாவரோ, அல்லது சர்வாந்தரியாமி வடிவமாக இத்தேகத்திலிருக்கும் புத்திவிருத்திகளுக்குச் சாக்ஷிரூபப் பரமேசுரராகிய எம்மையும், எமது சாஸ்திரமாகிய ஆணையையும் தாண்டி யாவர் துன்பஞ் செய்வரோ அவரும் அசுரரேயாவர். இதனாலே யாவர் விவேகமற்றவரோ, யாவர் கூறிய வகையே இகலோகத்தில் எல்லாப் போகங்களும் கிடையாதவராகிப் பரலோகத்திலும் கீழானகதியை யடையும் புருடார்த்தமெல்லாமில்லாதவரோ அவரும் அசுரரே யாவர் என்று நீ தெரிந்துகொள். விளம்பியபடி விபரீத பாவனையோடு கூடி வேத அருத்தத்தை விரோதஞ் செய்பவர் மநுடராகத் தோன்றினும் அசுரத் தொழிலையே செய்பவராதலின் அவரை அசுரரூபமாகவே யறிந்துகொள். அவரோடு சேரவேண்டாம்; அவர் என்னை

மெல்லாம் அசுரத்தன்மையோடே கூடியிருக்கும். மநுடர்கள் அசுரர்களல்லாவிட்டாலும் அவர்கள் துஷ்டச் செய்கையாலே அசுரர்கள் ஆகின்றார்கள். (இதனாலே ஸ்ரீ பகவான் கெட்ட தொழிலாலே மநுடருக்கும் அசுரத்தன்மை வருதலால் அவற்றை விட்டுவிட வேண்டுமென் றருளியதாயிற்று.)

[முன்னர் சாத்துவிகர் தேவர் என்றும், இராஜசர் தாமதர் விபரீதபுத்தியுடையராதலின் அசுரர் என்றும் நிர்ணயம் செய்யப்பட்டது; இப்போது, சத்துவ குணமுடையவரைக் கொள்ளும்பொருட்டும், ரஜதமகுணமுடையவரைத் தள்ளும்பொருட்டும், ஆகாரம் யாகம் தவம் தானம் என்னும் நான்கினுடைய மூன்று வகுப்பை ஸ்ரீ பகவான் அருளிச்செய்கிறார்.]

ஏ அருச்சுன! எல்லாப் பிராணிகளுக்கும் பிரியமாகிய ஆகாரமும் மூன்று வகையாகும். அதுவல்லாமல் யாகமும், தவமும், தானமும் மூன்று வகையேயாம் அவற்றின் சாத்துவிகாதி பேதத்தைக் கூறக் கேட்பாயாக.

ஏ குந்திமைந்த! முன்னேயுபதேசித்த சிரத்தையே கேவலம் மூன்று வகை யென்பதாகவில்லை; பின்னையோ, யாவருக்கும் பிரியமான ஆகாரமும் சாத்துவிகாதி பேதத்தாலே மூவகையேயாம்; நான்குவகையல்லவாம். ஏனெனின்? உலகத்திலுள்ள பொருள்கள் எல்லாம் முக்குண வடிவமாகவே இருத்தலின், வேறாக நான்காவது ஒரு வகுப்பு உண்டாகாதாம். கடித்துத் தின்னும் தேன்குழல் முதலியவை, விழுங்கும் அன்னம் முதலியவை, சுவைத்துண்ணும் பழரசமுதலியவை, சாரத்தை உட்கொள்ளும் கரும்பு முதலியவை ஆகிய பசியை நீக்கும் கண்கண்ட பலத்தைத் தரும் ஆகாரம் மூன்றுவகையாக இருப்பதேபோலத் தருமத்தை யுண்டாக்கும் வாயிலாக, கண்காணாத சொர்க்கத்தைத் தரும் யாகம் தவம் தானம் என்னும் மூன்றும் மூன்று வகையாகும். அக்கினி முதலிய தேவதைகளை யுத்தேசித்து நெய் முதலியவற்றை மந்திரஞ் சொல்லித் தீயில் விடுதல் யாகமெனப்படும். தேக இந்திரியாதிகளைக் காயவைக்கும் கிருச்சிர சாந்திராயணாதிகள் தவமெனப்படும். தன்னுடையவையாகிய பொன் பசு மனை முதலியவற்றைத் தன்னுடையவென்னும் அபிமானத்தைவிட்டு, மறையவர் முதலியவருக்குக் கொடுத்தல் தானமெனப்படும். இந்த ஆகார முதலிய நான்கையும் மூவகையாகப் பிரித்துக் கூறுகிறேன், ஒருமையுடன் கேட்பாயாக:

[இப்போது ஆகாராதி நான்கின் மூவகைப் பேதத்தை ஸ்ரீ பகவான் விஸ்தாரமாக அருளிச்செய்யத் தொடங்கி முதலில் ஆகார பேதத்தை யருளுகின்றார்.]

ஏ அர்ச்சுன! ஆயுள், சத்துவம், பலம், ஆரோக்கியம், சுகம், பிரீதி என்னுமியாவற்றையும் விருத்திசெய்வதும், இரசமுடையதும், பசையுடையதும், திரமும், மனோரம்மியமும் ஆகிய ஆகாரம் சாத்துவிகர்க்குப் பிரியமுடையதாம்.



ஏ பார்த்த! நெடுங்காலம் வாழ்தல் ஆயுளாம். பெரிய பெரிய துக்கம் வந்தாலும் கஷ்டப்படாமலிருக்கும் மனோதைரியம் சத்துவமாம்; அல்லது உற்சாகமாம். தான்செய்புங் காரியத்தில் ஆயாசம்வராமலிருக்கும்படியான சரீர வலிமையே பலமாம். சுரம் சூலம் முதலிய நோய்களில்லாமலிருத்தல் ஆரோக்கியமாம். உண்டபின்னர் உள்ளே கொள்ளும் சந்தோஷம் சுகமாம். உண்ணும்போது அருசியில்லாமல் போஜனவிஷய அதிக ஆசை பிரீதியாம். இவையாவற்றையும் வளரச்செய்யும் ஆகாரம் சாத்விகர்க்குப் பிரியமுடையதாம். இனிப்பின் முக்கியத்தாலே மிகவும் சுவாதான ஆகாரம் இரசமுடையதாம். இயற்கையான நேயத்தாலும் இடையில்விடும் நெய் முதலிய நேயத்தாலும் விசேஷமான ஆகாரம் பசையுடையதாம். இரசம் முதலிய அம்சத்தாலே தேகத்தில் அநேகநாள் நிலைத்திருக்கும் ஆகாரம் திரமுடையதாம். கெட்ட நாற்றம் அசுத்தம் முதலிய எந்தத் தோஷமும் இல்லாமல் பார்த்தமாத்திரத்தினாலே மனதிற்கு மகிழ்ச்சிதரும் ஆகாரம் மனோரம்மியமாம். இவ்வகை நல்லகுணங்களோடு கூடிய நால்வகை யாகாரம் சாத்துவிகர்க்கே பிரியமுடையதாம். (சத்துவகுணம் வேண்டியவர் இம்மாதிரியான ஆகாரத்தையே புசிக்கவேண்டுமென்பது ஸ்ரீ கருணாமூர்த்தியினுடைய திருக்கருத்தாம்.)

ஏ அர்ச்சுன! கைப்பு, புளிப்பு, கார்ப்பு, மிகவெம்மை, காழ்ப்பு, காய்ந்தது, தாகஞ்செய்வது, துக்கசோகரோகமென்னும் மூன்றையுந் தருவது ஆகிய இவை இராஜசர்க்கே பிரியமாம்.

ஏ பார்த்த! வேம்பு முதலிய ஆகாரம் மிகவும் கைப்பாம். எலுமிச்சை முதலிய ஆகாரம் மிகவும் புளிப்பாம். உப்பு முதலிய ஆகாரம் மிகவும் கார்ப்பாம். உண்ணும்போது வாயும் கையும் வெந்துபோவதான ஆகாரம் மிகவும் வெம்மையாம். மிளகாய் முதலிய ஆகாரம் மிகவும் காழ்ப்பாம். பசையில்லாத கருந்தினை முதலியவை மிகவும் காய்ந்தனவாம். மிகப் பெருந்தாபத்தைத்தரும் கடுகு முதலியவை மிகவுந் தாகஞ்செய்வனவாம். துக்கம் சோகம் நோய் மூன்றையும் தரும் ஆகாரங்கள் யாவையென்னில்:— அக்காலத்திலேயே உண்டாம் பீடை துக்கமாம்; இனிவருங் கெட்ட எண்ணம் சோகமாம்; சுரம் முதலியவை நோயாம். (வாத பித்தாதி தாதுக்களை வேறுபடுத்தி மேலே கூறிய மூன்றையுங் கொடுக்கும் ஆகாரம் துக்கசோக நோயைத் தருவது என்று சொல்லப்படும். இந்த ஆகாரங்கள் எல்லாம் இரஜோகுணமுடையவர்க்கே பிரியமாம். இந்த ராஜச ஆகாரங்களைச் சத்துவகுணம் விரும்பியவர் தொடவே கூடாதென்பது ஸ்ரீ பகவானுடைய திருக்கருத்தென்று அறிந்து விட்டொழிக்கவேண்டும்.)

(தொடரும்.)

187468

## ஓர் கடிதம்.

### சந்தாநேயர்கட்கோர் விஞ்ஞாபனம்.

*சமயமறிந்துதவும் சற்குணப் பெரியீர்!*

சுமார் 20 ஆயிரம் சந்தாதாரர்களையுடைய, இவ்வானந்தபோதினியி னுண்டுச் சந்தா ஒரு ரூபாயிலிருந்து அதிகப்படுத்தவேண்டுமென்று சில அபிமானிகள், பத்திரிகைவாயிலாகப் பன்முறை யறிவித்தும், கனம் பத்திரிகாசிரியரவர்கள், நம் நன்மையையே நாடியவராய், அதற்கிடந்தரவில்லை யென்பது நிதர்சனம்.

இத்தென்னிந்தியாவிலுலவிவரும் பல்வேறு பத்திரிகைகளி லிவ்வானந்தபோதினி யொன்றே, சாலச் சிறப்புடைத்தென்றுணராதாரில்லை.

ஆனதாலேனைய சந்தாதாரரும், கொஞ்சம் வாக்கு சகாயஞ் செய்து புது நபரைச் சேர்ப்பின், இன்னுஞ் சில பக்கங்களைச் சேர்த்து, கனம் பத்திராதிபரவர்க ளின்னு மதிக ஊக்கத்தோடுழைக்கவு மிடங்கொடுக்குமென்பது யாமறியாததன்று.

தமியேனு மிவ்வாண்டி லைந்தாறு புதுநபரைச் சேர்த்துள்ளேன். பின்னுஞ் சேகரிப்பேன்.

நம் பத்திரிகையைக் கவனத்தோடு வாசித்துணர்ந்த அன்பர்க்கு யான் கூறவேண்டியதவசியமில்லை. உலக முன்னேற்றத்தையே நாடி நஷ்டத்துடனுழைப்பவர்க்கு நம்மாலான பிரதிபலன் ஏன் செய்யலாகாது? ஆரம்பியுங்கள்.

நம் பத்திரிகைக்கு விஷயதானந் தொடர்ந்து செய்துவந்த கல்விக் களஞ்சியம் ஸ்ரீமான் ஆரணி-குப்புசாமி முதலியாரவர்களின் மரணத்திற்காக இச்சங்கத்தார் அனுதாபங் காட்டுகிறார்கள்.

B. சுப்ரமண்ய முதலியார், செக்ரட்டரி,
உபாத்திமைச்சங்கம், ரிஷிவந்தியம்.

குறிப்பு:—இம்மாதிரிக் கடிதங்கள் நமக்குப் பல அன்பர்களிடமிருந்து வந்துகொண்டிருக்கின்றன. இவ்வாறே நம் ஆனந்தபோதினி முன்னிலும் விசேஷ விருத்தியடைந்திருப்பதால் இன்னும் சந்தாத் தொகையை உயர்த்தி இதன் பக்கங்களை அதிகப்படுத்தவேண்டுமென்று வேறு சில சந்தாநேயர்களும் தெரிவிக்கின்றனர். சந்தாதாரர்களின் உதவிகொண்டே போதினி இவ்வளவு விருத்தியடைந்திருப்பது உண்மையே. எனினும், இந்நண்பர் கூறுகிறபடி ஒவ்வொரு சந்தாதாரரும் தங்கள் தங்கள் சிநேகிதர்களையும் சந்தாதாரர்களாகச் சேர்த்து இன்னும் சந்தாநம்பரை அதிகப்படுத்துவார்களாயின், அவர்கள் நோக்கம்போல் பத்திரிகையின் பக்கங்களை இதே சந்தாத் தொகையில் அதிகமாக்கவும், வேறுபல விருத்திகளைச் செய்யவும் அனுகூலமா யிருக்குமென்பதை நண்பர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பத்திரிகாசிரியர்.

---

## சாதன சதுஷ்டயம்.

*நித்திய வநித்தி யங்க ணிண்ணயர் தெரிவி வேகம்*
*மத்திய விகபரங்கள் வருபோகங் களினி ராசை*
*சத்திய முரைக்க வேண்டுஞ் சமாதியென்றாறு கூட்டம்*
*முத்தியை விரும்பு மிச்சை மொழிவர்சா தனமிந் நான்கே.*

—(கைவல்லியம்.)

வேதாந்த விசாரம் செய்யப் புகுவதற்கு சாதன சதுஷ்டய சம்பன்னனே யதிகாரியாவான். பக்குவமில்லார்க்கருளலும், பாவிக்கறமோதலும், கண்ணிலார்க்குப் பொன்னாரம் பூட்டுதல்போலாம் என்று ஆன்றோர் அருளியிருப்பதினால் பக்குவதசையை அடையாத சீடனுக்கு ஆசான் உபதேசித்தருளமாட்டார். அந்தப் பக்குவம் யாதெனின் (1) நித்தியாநித்திய வஸ்து விவேகம். (2) இகமுத்திரார்த்த பலபோகவிராகம். (3) சமாதிஷட்க சம்பத்தி. (4) முமுக்ஷுத்வம் என்னும் இந்நான்கு சாதனங்களையும் பெற்றிருத்தலே. சாதனமின்றி ஞானம் கிட்டாது. கைவல்லியத்தில்,

*சாதன மின்றி யொன்றைச் சாதிப்பா ருலகி லில்லை*
*ஆதலா லிந்த நான்கு மடைந்தவர்க் கறிவுண் டாகும்*
*சாதன விவேகி புள்ள நுழையாது நுழையு மாகில்*
*பூதசன் மங்கள் கோடி புனிதனும் புருடனாமே.*

என்று அருளியிருப்பது காண்க.

1. *நித்தியாநித்திய வஸ்து விவேகம்.*

இவ்வுலகத்தின்கண்ணுள்ள எல்லா வஸ்துக்களையும் விசாரித்து எது நித்தியமாயுள்ளது எது அநித்தியமாய் அழிந்துபோகக்கூடியது என்று ஆராய்ந்தறிந்து அநித்தியமாயுள்ள வஸ்துக்களின் மேல் புத்தி செல்லவொட்டாமற் றடுத்து, நித்தியமாயுள்ள வஸ்துவின்மேல் மனம்பற்றியிருப்பதே நித்தியாநித்திய வஸ்து விவேகம் எனப்படும். உற்று நோக்குங்கால் இவ்வுலகத்திலுள்ள ஒவ்வொரு வஸ்துவும் சதாகாலமும் மாறுதலடைந்து கொண்டேயிருக்கிறது. மனிதர்களிறப்பதும் மிருகங்கள் சாவதும் செடி கொடி மரங்களழிவதும் மேடு பள்ளமாவதும் பள்ளம் மேடாவதும் நாம் பிரதிதினமும் காண்கிறோம். சக்கிரம் சுழலுவதைப்போல ஒவ்வொரு வஸ்துவுங் காலஞ் செல்லச்செல்ல மாறுதலடைந்துகொண்டே யிருக்கிறது. இப்படி நாம் பார்க்கும் ஒவ்வொரு வஸ்துவும் மாறுதலடைந்து கொண்டிருப்பதினாலே மாறுதலில்லாத வஸ்து ஒன்று இருக்கவேண்டுமென்று பெறப்படுகிறதல்லவா? ஏனெனில் மாறுதலில்லாத வஸ்துவில்லாவிட்டால் மாறுதலுடைய வஸ்துக்கள் எங்ஙனமிருப்பது கூடும்? பள்ளமில்லாமல் மேடு எப்படியுண்டாகும்? அப்படி மாறுதலில்லாமல், நித்தியமாய், நிஷ்களங்கமாய், நிர்மலமாய் இருக்கும் வஸ்துதான் யாது? அதுதான் ஆத்மா. அதுதான் கடவுள். அதுதான் பிரம்மம். நாமரூப விகாரமுள்ள அசத்தாகிய உலகம் சத்துப்போல் தோன்றிக்கொண்டிருப்பினும் அதின்

கண் மனம் செல்லவொட்டாமற் றடுத்து, சுயம்புவாய், நித்தியமாயுள்ள பிரம்மத்திலேயே புத்தியை வைப்பதுதான் நித்தியா நித்திய வஸ்து விவேகம்.

2. இகமுத்திரார்த்த பல போகவிராகம்.

இகத்திலும் பரத்திலும் கன்மத்தினால் வரப்பட்ட விஷயபோகமனைத்தும் கண்ணிமைப் பொழுதிலழியக்கூடியதென்றுணர்ந்து வாந்திசெய்த அசன [சோறு] மலமூத்திராதிகள்போல அவைகளை வெறுத்துத் தள்ளி இவ்வுலகத்திற்குக் காரணகர்த்தாவாயுள்ள கடவுளின்மேல் பக்திவைப்பதே இகமுத்திரார்த்த பலபோக விராகம். உலகத்தில் சுகமென்பது ஏது? சுகமெங்கிருக்கிறதோ அங்கு துக்கமுந்தானிருக்கும். நித்தியாநித்திய வஸ்து விவேகத்தினால், நித்தியம்போல் தோன்றிக்கொண்டிருக்கும் ஒவ்வொரு வஸ்துவும் உண்மையில் அழியக்கூடியதே என்றுணர்ந்தபின் அப்படி அநித்தியமான வஸ்துக்களினின்றும், நித்தியமான சுகம் எப்படிக் கிடைக்கும்? ஆகையால் ஆசைகாட்டி மோசஞ்செய்யும் இவ்விஷய போகங்களிடத்துப் புத்தியைச் செலுத்தாமல் வைராக்கியத்துடன் சுகசொரூபியாயுள்ள பகவானிடத்து மனம் லயித்திருக்கும்படி வைத்தலே இகமுத்திரார்த்த பல போக விராகம்.

3. சமாதிஷட்கசம்பத்தி:-1. சமம்; 2. தமம்; 3. உபரதி; 4. திதிக்ஷை; 5. சமாதி; 6. சிரத்தை என்றாறுவகை.

மனதை விஷயாந்திரங்களில் செல்லவொட்டாமல் திருப்புவது சமம் என்றும் இந்திரிய நிக்கிரகம் செய்வது தமம் என்றும் பெயர். மனதையும் இந்திரியங்களையும் கண்ட விஷயங்களிலெல்லாம் அலைந்து திரிந்து உழலாமல் அவைகளை அகமுகமாய்த் திருப்பி ஆத்மாவைப் பற்றியிருக்கச் செய்தலே சமதமாதிகள்.

பாபகிருத்தியங்களை அறவேயொழித்துப் புண்ணிய கருமங்களைப் பலாபேக்ஷையின்றிப் பகவத் பிரீதியாகச் செய்தலே உபரதி யெனப்படும். கர்மம் செய்யாமல் ஒருவருமில்லை. ஒவ்வொரு மனிதனும் பாபமோ புண்ணியமோ ஏதோ ஒரு கர்மத்தைச் செய்துகொண்டுதானிருக்கிறான். பாபமே செய்யாமல் புண்ணியமே செய்தபோதிலும், கர்மங்களில் பலாபேக்ஷை யிருக்கும்பக்ஷத்தில் அப்பலனை யனுபவிக்க ஜன்மங்களெடுத்துத் தானாகவேண்டும். கர்மமும் செய்யவேண்டும். ஆனால் ஜன்மங்களெடுக்கக்கூடாது. இதற்கேதேனு முபாய முண்டோவெனில் ஒன்றுண்டு. பாப கருமங்களை யொழித்து நற்கருமங்களைப் பலாபேக்ஷையின்றிச் செய்து ஈசுவரார்ப்பணமாக விடுதலே நல்ல யுக்தி. அதுதான் உபரதி.

சுகதுக்க சீதோஷ்ணங்களைச் சமமாகப் பாவித்தலே திதிக்ஷை. பிராரப்த கர்மத்தினால் துக்கம் வந்தகாலத்து வருத்தப்படாமலும், சுகம் வந்தகாலத்து மகிழ்ச்சிகொள்ளாமலும் தான் அவைகளோடு சம்பந்தப்படாமல் தனியே சாக்ஷிபோல் நின்று அவைகளைச் சமமாய்ப் பார்த்தலே திதிக்ஷை.



பூர்வம் விஷயானுபவங்களில் வைத்த பிரியத்தையெல்லாம் குருவினிடத்து வைத்து அவர் வார்த்தையை வேதவாக்கியமாகக்கொண்டு நம்பி அவரிடத்தே பயபக்தி விசுவாசம் வைப்பதுதான் சிரத்தை.

சற்குரு உபதேசித்ததை "மர்க்கடநியாயம்" போலப் பற்றி, சந்ததமுமனுசரித்து, திருப்பிய மனமு மிந்திரியங்களும் விஷயங்களிற் செல்லாமல் தடுத்துச் சிரவணத்தில் வைப்பது சமாதியெனப்படும்.

4. முமுக்ஷுத்வம்.

ஜனனமரண சம்சார சாகரத்திலகப்பட்டுத் தத்தளிக்காமல் அதினின்றும் ஈடேற்றி யருளவல்ல ஆசான் எங்குளன் என்று கன்றைப்பிரிந்த பசுவைப்போலத் தேடித்திரிந்து கண்டுபிடித்து அவரடிபணிந்து அவர் திருவாக்கை வேதவாக்கியமாகக்கொண்டொழுகி மோக்ஷ விச்சைகொண்டு அதைப்பெற ஆசான் காட்டிய மார்க்கத்தில் கண்ணோக்காயிருத்தலே முமுக்ஷுத்வம்.

மேற்கூறிய நான்கு சாதனங்களும் கைகூடினவர்களே வேதாந்த சிரவணத்திற் கதிகாரிகள்.

ஆதலால் ஆரிய நேயர்களே! நாமெல்லோரும் நம்மாலியன்றமட்டும் முயற்சிசெய்து இந்நான்கு சாதனங்களையும் பெற்று வேதாந்த விசாரம் செய்து நற்கதியடைவோமாக. எல்லாம்வல்ல ஈசன் அருள்புரிவானாக.

கி. சந்தானராமன்,
குளத்தங்கரைத் தெரு, நீடாமங்கலம்.

## அம்பாலிகை அல்லது அதிசய மரணம்

(318-ம் பக்கத் தொடர்ச்சி.)

குரலைக் கேட்டதே மலையாளி தைரியமடைந்து தன் ஈட்டியை யோங்கிக்கொண்டு ஒரு பாய்ச்சலாய், இதுகாறும் தான் அச்சுதனுடைய ஆவேசமென்று கருதிய அவ்வுருவத்தின்மேல் பாய்ந்தான்.

உடனே மிக்க அபூர்வமான ஒரு சம்பவம் நேர்ந்தது. அதாவது மலையாளி யப்படிப் பாய்ந்த மறு வினாடி தன் இரு கரங்களையும் தன் கண்கள்மேல் வைத்து "அய்யோ! கண்கள் தெரியவில்லையே" என்று அலறிக் கூவி மரம்போல நின்றுவிட்டான்.

பவானி யுடனே தரையிலிருந்து எழுந்து அந்த ஆவேச உருவத்திற்குச் சற்றும் அஞ்சாமல் அதன் அருகில்வந்து நின்றாள்.

அந்த ஆவேசம் உடனே தீபத்தை யணையென்றதே அவள் அணைத்துவிட்டாள். மறு நிமிடம் அவள் கரங்களிலிருந்த விலங்கு கழற்றப்பட்டதும், அவ்வுருவம் "என் கூடவேவா" வென்று அவளை யழைத்துக்கொண்டு அவ்வீட்டைவிட்டு வெளிப்பட்டது.

ஆனந்தலிங்தான் அவ்வுருவமென்று நாம் கூறவேண்டுவதில்லை. அவன்வரையில் அந்த வீட்டில் அம்பாலிகையில்லையென்று நன்றாய்த் தெரிந்துவிட்டது. பவானியும் ஆனந்தலிங்கும் இரண்டு நிமிடங்களில் வீட்டைவிட்டுத் தாண்டிவிட்டார்கள்.

மலையாளி சற்றுநேரம் கழித்துக் கண்களைத் திறந்துபார்த்தான். பிரகாசம் கொஞ்சம் தெரிந்தது. மறுபடி தீபத்தை ஏற்றினான். கண்கள் பழையபடி தெரிந்தன. அவன் மூலிகைகளில் தேர்ந்தவனாதலால் கண்களில் காட்டியதே சற்றுநேரம்மட்டும் குருடாக்கிவிடும் மூலிகையொன்றிருக்கிறதெனத் தெரிய "ஓகோ நாம் மோசம் போய்விட்டோ"மென்று துயரமும் கோபமுமடைந்தான். சுமார் கால்மணி நேரம் சிந்தித்தபிறகே அவன் புத்திக்கு அது விளங்கியது. கடைசியில் அந்த இரகசிய அறையை விட்டு, புத்தகசாலையில் வந்து உட்கார்ந்தான்.

மலையாளி யங்குவந்து உட்கார்ந்த சற்றுநேரத்திற்கெல்லாம் கறுப்பண்ணன் வந்தான். மலையாளி யவனை நோக்கி "லாயரோடு சென்றாயே சங்கதி யென்ன?" என்றான்.

கறுப்பண்ணன் தானும் லாயரும் சவக்கிடங்கிற்குச் சென்று அங்கு கண்ட சம்பவத்தைக் கூறினான்.

மலையாளி:—"நாம் மிக்க அசாத்தியமான பேயோடு போராடவேண்டியிருக்கிறது" என்றான்.

கறுப்:—நீ மறுபடி யந்த ஆவேசத்தைக் கண்டாயோ?

மலை:—ஆம்.

கறுப்:—எங்கே.

மலை:—மேலிருக்கும் இரகசிய அறையில்.

கறுப்:—அடடா! அந்த இரகசிய அறைகள் தெரிந்துவிட்டனவோ?

மலை:—அதன்மேல் நடந்த விஷயங்களை யெல்லாம் கூறினான்.

கறுப்:—அப்படியாயின் பவானி நம்மைப் பூரணமாய்க் காட்டிக் கொடுத்துவிட்டான்?

மலை:—நான் ஆரம்பத்திலிருந்தே கூறிக்கொண்டிருக்கவில்லையா?

கறுப்:—சரி. அவனை யுடனே ஒழித்துவிடவேண்டும்.

மலை:—"அச்சந்தர்ப்பம் கைநழுவிப் போய்விட்டது. ஆவேசம் அவளைக் கூடவே அழைத்துக்கொண்டு போய்விட்டது" என்றான்.

அதன்பின் இரண்டு துஷ்டர்களும் நெடுநேரம் சம்பாஷித்துக்கொண்டிருந்து கடைசியில், "பவானியாலும், இறந்துபோன அச்சுதன்போல் நடிக்கும் மனிதனாலுமே தங்களுக்கிருக்கும் ஆபத்துகளெல்லாம் நேரிடவேண்டும்" என்று நிச்சயித்துக்கொண்டார்கள்.

கடைசியில் கறுப்பண்ணன் "நாம் கூடியசீக்கிரத்தில் நமது விரோதியாகிய ஆவேசத்தை யொழித்துவிடுவோம்" என்றான்.



மலை:—எப்படி?

கறுப்:—"இன்றிரவு ஒன்பது மணிக்கு லாயர் அவனைச் சந்திக்கப்போகிறான். அப்போது அவனை மெய்யான ஆவேசமாகவே செய்துவிட எல்லா ஏற்பாடும் ஆயத்தமாய்ச் செய்யப்பட்டிருக்கின்றன" என்றான்.

*　　*　　*　　*　　*　　*
*　　*　　*　　*　　*

பிற்பகல் ஆனந்தலிங் தன் மனைக்குச் சென்றபோது பவானி தனக்காக எதிர்பார்த்துக்கொண்டிருப்பதைக் கண்டான். இராத்திரிக்கு லாயரைச் சந்திக்கச் செல்லுமுன் சற்று இளைப்பாறவேண்டுமென்று சயனித்துக்கொண்டான்.

பவானி, தான் மலையாளியிடம் பிராணாபத்தில் சிக்கிக்கொண்டு கொல்லப்படப்போகும் தறுவாயில் ஆனந்தலிங் எவ்வாறு அங்குவந்து தன்னைக் காப்பாற்றினான் என்ற ஆச்சரியத்தை யறிய மிக்க ஆவலுடையவளாயிருந்தாள்.

ஆனந்தலிங் அதைப்பற்றி சுருக்கமாய்க் கூறினான். அதாவது அவனுக்கிருக்கும் அனுபோகத்தால், கட்டடத்தை வெளிப்புறத்திலும் நாற்பக்கமும் உன்னிப்பாய்க் கவனித்ததே, மேல்மாடியின் மேற்புறம் யாரும் செல்லாமல் ஒரு பாகம் மூடப்பட்டிருக்கிறதென அறிந்துகொண்டான். அதன்மேல் அதற்கு வழி புத்தகசாலையிலிருக்கிறதென்று தானே யூகித்துக்கொண்டான். அவ்வளவு தெரிந்தபின் பவானியின் உதவியில்லாமலே அதற்குச் செல்லும் வழியை யறிந்துகொள்வது அவனுக்குப் பெரியகாரியமல்ல. உண்மையில் அவனே, பவானி அவ்வழியைச் சுலபமாய் அறிந்துவரட்டுமென்றே அதன் கதவைச் சரியாய் மூடாமல் அதன் சந்தின் மூலமாய் காற்று வரும் வண்ணம் கதவைச் சற்று சந்திருக்கும்படியாகவே மூடிக்கொண்டு சென்றான். அதனாலேயே பவானி அவ்வழியை யறிந்துகொண்டான். பவானி அதைக் கண்டுபிடிப்பதற்குச் சற்று முன்பே ஆனந்தலிங் அவ்வழியே சென்றான்.

ஆனந்தலிங்கின் இராந்தல் ஒளியைத்தான் பவானி கண்டது. அவள் கேட்ட சந்தடியும் அவன் செய்த சந்தடியே. பிறகு மலையாளி வந்ததையும், அவளைப் பிடித்துக்கொண்டதையும், அவர்களுக்குள் நடந்த சம்பாஷணையையும் ஆனந்தலிங் கேட்டுக்கொண்டிருந்தே சமயத்தில் அவளைக் காப்பாற்றினான்.

பவானி ஆனந்தலிங்கை நோக்கி, "அந்த இரகசிய அறைகளில் நீ ஏதாவது கண்டுபிடித்தாயா?" என்றாள்.

ஆனந்தலிங் "இதோபார் இக்கடிதம்" என்று ஒரு சிறு கடிதத்தைக் காட்டினான்.

அக்கடிதத்தைக் கண்டதே பவானியின் மனம் துடிதுடித்தது. ஆனந்

தலிங் "இது யார் எழுதியதென்று நீ கண்டுகொண்டாயா?" வென்றான். பவானி மனப்பதைப்போடு "ஆகா நன்றாய்த் தெரிகிறது" என்றாள்.

அக் கடிதத்தில் கீழ்க்கண்டபடி எழுதப்பட்டிருந்தது:—

"என் அன்பார்ந்த பவானிக்கு :—

மிக்க பயங்கரமான அதிசய சம்பவம் எதுவோ நேர்ந்திருக்கவேண்டும். நான் பெரிய கனவில் இருந்ததுபோல் தெரிகிறது. எவ்வளவுகாலம் அப்படியிருந்தேனோ தெரியாது. எனக்கு எல்லாம் பெரிய மர்மமான அதிசயமாயிருக்கிறது. என் அருகில் ஒரு கறுப்பு மனிதன் நின்றுகொண்டிருந்தான். அவன் தான் ஒரு டாக்டர் என்று கூறினான். நான் மிக்க வியாதியுற்றிருந்ததாயும் அவன் கூறினான். ஓ! என் அன்பார்ந்த செவிலித் தாயே! நீ எங்கு இருக்கிறாய்? எனக்கு நடந்த யாவும் மிக்க அதிசயமான கனவுபோலவே யிருக்கின்றன. நான் ஒரு அதிசயமான புது அறையிலிருக்கிறேன். என்னமோ பிசகு நடந்திருக்கிறதென்று என் புத்தியிற் படுகிறது. நான் உன்னைப்பற்றிக் கேட்டபோது நீ வியாதியுற்றிருப்பதாகவும், நான் ஒரு கடிதம் எழுதினால் அதை யுன்னிடமளிப்பதாகவும், நீ வந்து என்னைக் காணலாமென்றும் கூறினார்கள். என் பிரியமுள்ள செவிலித் தாயே! தயவு செய்து என்னை யுடனேவந்து பார்த்து இந்த அதிசய சம்பவங்களைப்பற்றிய விவரத்தை யெனக்குக் கூறினால்தான் என் மனம் நிம்மதியடையும். அதோடு..."

இவ்வாறு அக்கடிதம் முழுதும் எழுதப்படாமலே அறைகுறையாய் விடப்பட்டிருந்தது.

ஆனந்தலிங் பவானியை நோக்கி "இதனால் அவன் இங்குக் கொண்டுவரப்பட்டானென்றும் பிறகு இதைவிட்டு வெளிப்படுத்தப்பட்டானென்றும் நன்கு விளங்குகிறது. நான் இவர்கள் நடக்கைகளைக் கவனித்துக் கொண்டிருக்கிறேனென்று இவர்களுக்கு நன்றாய்த் தெரியும் ஆதலால் அவனை யொன்றும் செய்ய இவர்களுக்குத் தைரியமில்லை. இன்னும் சில மணிகளுக்குள் அம்பாலிகை விடுதலையடைவாள்" என்றான்.

பவானி:—"உன் வார்த்தைகளில் எனக்குப் பூரண நம்பகமிருக்கிறது" என்றாள்.

ஆனந்தலிங்:—"நீ இந்த நம்பகத்தோடிருந்தால் அம்பாலிகையைச் சீக்கிரத்தில் உன்னிடம் ஒப்புவிப்பேன்" என்றான்.

பொழுது போய்விட்டது. ஆனந்தலிங் லாயரைச் சந்திக்கவேண்டிய வேலை நெருங்கிவிட்டது. (தொடரும்.)

ஆரணி. குப்புசாமி முதலியார்.

---



## ஒரு வேண்டுகோள்.

உபவாசத்தால் இளமையடையலாமென்று சிக்காகோ சர்வகலாசாலையில் உடல்நூற் பண்டிதரான அறிஞர் கார்ல்ஸன் கூறுகிறார். 15 நாள் உபவாசம் இருத்தல் வேண்டுமென்றுஞ் சொல்லுகிறார். இது விஷயமான விபரத்தைத் தெளிவாய்த் தெரிவிக்கும்படி பலர் அபேக்ஷிக்கிறார்கள். தெரிந்த வைத்திய பண்டித சிரோமணிகள் இதனை நம் ஆனந்தன் மூலமாக வெளியிடின் நலமாம்.

## பித்தத்தால் எழும்புகிற வியாதிகளுக்குத் தகுந்த ஓர் கஷாயம்.

கடுக்காய், தான்றிக்காய், நெல்லிவற்றல், சதகுப்பை இந்த நான்கு சரக்குகளையும் திறுசுக்கு ஒரு ரூபாய் எடை வீதம் சேகரம் செய்து உரலில் போட்டு நன்றாய் இடித்துத் தூள்செய்து வஸ்திரகாயம் செய்து மூன்றுபாகமாகப் பிரித்துவைத்துக்கொண்டு ஒரு சிறிய மண் பாத்திரத்தில் கால்படி சுத்தமான தண்ணீர்விட்டு அதில் ஒரு பாகத்தைப்போட்டு அடுப்பில்வைத்து அரைக்கால்படியாகச் சுண்டக் காய்ச்சி வடிகட்டி எடுத்துக் கை பொறுக்கும் பாகத்தில் 1 காசு எடை தேனும் நெய்யும் விட்டுக் கலக்கி காலையில் வீசம்படியும் மாலையில் வீசம்படியுமாக மூன்றுநாள் ஆறு வேளை சாப்பிட்டால் பித்தமயக்கம், பித்தவாந்தி, கண் எரிச்சல், குலை எரிச்சல், பித்தவெட்டை, பித்த சுரம், காங்கை, கை கால் ஓய்ச்சல், வாய் கசத்தல், சோகை முதலாகிய வியாதிகளை நிவர்த்திசெய்யும் என்பது திண்ணம். 6 வேளையில் சுகம் கிடைக்காவிட்டால் மறுபடியும் 2,3 வேளை சாப்பிடவும்.

5 வயது முதல் 12 வயது வரையிலுள்ள சிறுமி சிறுவர்களுக்கு மேற்கண்ட அளவில் பாதி கொடுக்கவும், பத்தியமில்லை. இது விபரம் ஒவ்வொரு குடும்பத்தாரும் அவசியம் தெரிந்து கையாண்டு வருவது மிக்க நலமாகும்.

## ஆச்சரியப் பிறவிகள்.

தூத்துக்குடியில் ஒரு பன்றி 1-2-25-ல் ஒரு பன்றிக்குட்டியை யீன்றது. இக்குட்டிக்குத் தலை ஒன்று, உடம்பு இரண்டு, கால்கள் எட்டு இருக்கின்றனவாம். இதுவும் கலிகாலத்தின் விந்தையன்றோ!

* * * * *

கண்டி மாகாணம், வளல என்னும் கிராமத்தில், ஸ்ரீமான் வைத்தியர் ரா. ம. களுபண்டா அவர்களுக்குரிய சுமார் 8 வயதுடைய ஒரு பசு, 11-1-1925-ல் ஒரேமாதிரியான மூன்று பெண் கன்றுகளை யீன்றது. நாளதுவரை அவைகள் சுகமாய் இருக்கின்றனவாம்.

## இயற்கையின் விநோதம்.

பல்லடம் தாலூக்கா, வாவிப்பாளையம் கிராமம், ஸ்ரீமான் அவனாசிக் கவுண்டர் தென்னமரத் தோப்பில், ஒரு தென்னமரம் 12 முழம் மட்டைகள் விட்டு வளர்ந்திருக்கிறது. அதில் சுற்றிலும் கிளைகள் செழித்திருக்கின்றன. இம்மரம் காய் தருகிறதில்லையாம்.

# "ஆனந்தபோதினி" பஞ்சாங்கம்.

குரோதன வருஷம் சித்திரை மாதம் — கலியுகாதி 5027 சாலிவாகனம் 1848,
பசலி 1334-35—கொல்லமாண்டு 1100-1101—ஹிஜரி 1343-44,
இங்கிலீஷ் 1925 வருஷம் ஏப்ரல் மாதம் — மே மாதம்

| சித்திரை | ஏப்ரல் | வாரம். | திதி. | நக்ஷத்திரம். | யோகம். | விசேஷங்கள். |
|---|---|---|---|---|---|---|
| 1 | 13 | திங் | பஞ்41-40 | கேட்39-8 | சித்60 | மேஷரவி நா-6-33-வி, வருஷப்பிறப்பு |
| 2 | 14 | செ | சஷ்35-58 | மூல35-25 | அ35-25சி | |
| 3 | 15 | புத | சப்30-30 | பூரா31-53 | அமி60 | கண்ணிதாரம்பம் செய்ய |
| 4 | 16 | வியா | அ25-25 | உத்28-38 | சித்60 | பிரயாணம் விலக்க |
| 5 | 17 | வெ | நவ 20-48 | திரு25-53 | ம25-53சி | வராஹஜயந்தி |
| 6 | 18 | சனி | தச16-40 | அவி23-38 | சி23-38அ | கரிநாள் |
| 7 | 19 | ஞா | ஏ12-55 | சதை21-45 | சித்60 | சர்வ, மத்வ ஏகாதசி |
| 8 | 20 | திங் | துவா9-50 | பூரட்20-35 | ம20-35சி | பிரதோஷம் |
| 9 | 21 | செ | திர7-25 | உத்-20 | அ20-0சித் | மாச சிவராத்திரி, கிருஷ்ணாங்கார சதுர்த்தசி |
| 10 | 22 | புத | ச●5-50 | ரேவ20-22 | மர60 | சர்வத்திர அமாவாசை |
| 11 | 23 | வியா | அமா5 13 | அசு21-43 | அ21-43சி | [கை |
| 12 | 24 | வெ | பிர5-53 | பர·✕·24-20 | சித்60 | சந்திரதெரிசனம், கிருத்தி |
| 13 | 25 | சனி | துதி7-45 | கிரு28-20 | அமி60 | |
| 14 | 26 | ஞா | திரி11-10 | ரோ33-38 | சித்60 | |
| 15 | 27 | திங் | சது15-53 | மிரு40-10 | அ40-10சி | |
| 16 | 28 | செவ் | பஞ் 21-38 | திரு47-35 | ம47-35சி | |
| 17 | 29 | புத | சஷ்27-58 | புன55-20 | சித்60 | |
| 18 | 30 | வியா | சப்34-18 | பூசம்60 | அமி60 | |
| 19 | 1 | வெ | அஷ்40-5 | பூசம்2-50 | மர60 | |
| 20 | மே 2 | சனி | நவ44-38 | ஆயி9-38 | மர9-38அ | |
| 21 | 3 | ஞா | தச47-25 | மகம்14-55 | ம14-55சி | |
| 22 | 4 | திங் | ஏ48-13 | பூரம்18-23 | சித்60 | |
| 23 | 5 | செவ் | துவா47-8 | உத்19-53 | அ19-53சி | பரசுராம துவாதசி |
| 24 | 6 | புத | திர44-5 | அஸ்19-28 | ம19-28சி | பிரதோஷம் [மழை |
| 25 | 7 | வியா | சது39-25 | சித்17-15 | சி17-15அ | நரசிம்மஜயந்தி, 10-க்குள் |
| 26 | 8 | வெ | ○33-30 | சுவா14-20 | சித்60 | சித்ரா பௌர்ணமி |
| 27 | 9 | சனி | பிர26-28 | விசா8-58 | சித்60 | வைசாகபகுளம் |
| 28 | 10 | ஞா | துதி19-3 | அனு3-43 கேட்58-3 | மர58-3அ | அவமாகம் |
| 29 | 11 | திங் | திரி11-35 | மூல52-38 | சி52-38ம | விவாகம், யாத்திரை செ |
| 30 | 12 | செவ் | சது4-15 பஞ்57-30 | பூரா47-40 | சி47-40அ | அவமாகம் [ய்ய |
| 31 | 13 | புத | சஷ்51-20 | உத்43-20 | அ43-20சி | ரிஷபரவி நா-29-15, வாசனமேற |

| | | | |
|---|---|---|---|
| சுக் | சூரி புத | செ | |
| | 3-மே-சுக் 16-மிது-செ | | ராகு |
| கே | 16-மீன-வ-பு 24-மே-புத 27-ரிஷ சுக் | | |
| குரு | | சனி | |

PRINTED & PUBLISHED BY N. MUNISAWMI MUDALIAR AT THE "ANANDA BODHINI" POWER PRESS, 15, VENKATESA MAISTRY ST., MADRAS,

## BOOKS APPROVED BY THE TEXT-BOOK COMMITTEE & LARGELY USED IN SEVERAL SCHOOLS FOR NON-DETAILED STUDY

துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப்பட்டுப் பள்ளிக்கூடங்களில் உபபாடமாக வைக்கப்பட்டு வரும் புத்தகங்கள்.

திருமிக்க ஹெட்மாஸ்டர் அவர்களுக்கும், தமிழ்ப் பண்டிதர் அவர்களுக்கும் மிக்க வந்தனம்.

தமிழார்வமுடையீர்! இதனடியிற் குறிப்பிட்ட எம்முடைய பிரசுரப் புத்தகங்கள், எலிமெண்டரி பாடசாலைகளிலும், மற்ற பாடசாலைகளிலும் நான்காவது வகுப்பிலிருந்து பத்தாவது வகுப்புவரை உபபாடங்களாக வைக்கக்கூடியவை. ஆகலின், மிக்க தமிழ்த்தொண்டு புரிந்துவரும் எங்கள் ஆனந்தபோதினியில் அபிமானம் வைத்து இவற்றுள் தங்கள் பாடசாலைகளில், பாடங்களாக வைக்கத்தகுந்தவற்றைத் தேர்ந்தெடுத்துவைத்து எமது தமிழ்ப் பணியை ஆதரிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

| | | | ரூ. | அ. |
|---|---|---|---|---|
| 1. | சதானந்தர் | ... | 1 | 4 |
| 2. | ஜீவகன் | ... | 1 | 0 |
| 3. | கர்ணன் சரிதை | ... | 0 | 12 |
| 4. | ஸ்ரீ பீஷ்ம விஜயம் | ... | 0 | 10 |
| 5. | இந்துமாது சிரோமணிகள் | | 0 | 10 |
| 6. | ஸ்ரீ கிருஷ்ணன் தூது | | 0 | 8 |
| 7. | சிசுபாலன் | ... | 0 | 8 |
| 8. | கருணாகரரும்சத்தியசீலரும் | | 0 | 8 |
| 9. | அரிச்சந்திரன் சரிதை | ... | 0 | 8 |
| 10. | சிமந்தனி | ... | 0 | 8 |
| 11. | கீர்த்திசிங்கன் | ... | 0 | 7 |
| 12. | சகோதரவாஞ்சை | ... | 0 | 7 |
| 13. | தசாவதார மகிமை | ... | 0 | 6 |
| 14. | சன்டோபாக்கியானம் | ... | 0 | 6 |
| 15. | நீலக்கொடி | ... | 0 | 5 |
| 16. | அங்கதன் | ... | 0 | 4 |
| 17. | சத்தியவசனி | ... | 0 | 4 |
| 18. | செய்யுட்பாடத் திரட்டு | | 0 | 4 |
| 19. | விமலன்* | ... | 0 | 4 |
| 20. | கண்ணபிரான்* | ... | 0 | 4 |
| 21. | நாலுமந்திரி கதை* | ... | 0 | 4 |
| 22. | மணவாளன் | ... | 0 | 3 |
| 23. | பரசுராமன் | ... | 0 | 3 |

*இக்குறியுள்ள மூன்று புத்தகங்களும் இதே மாதிரி எழுத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

தக்கன்—(அச்சில்) கூடிய சீக்கிரம் வெளிவரும்.

# இரத்தினபுரி இரகசியம்.

இதில் மிக்க ஆச்சரியமும் நெஞ்சு திடுக்கிடக்கூடியவையும், ஆதிமுதல் அந்தம் வரையில் மனதைக் கவரக்கூடியவைகளுமான சம்பவங்கள் நிறைந்துள்ளன. பலவித நடவடிக்கைகளையுடைய பாத்திரங்களுமிருப்பதால், அநேக நீதிகளும், புத்திமதிகளும் தக்க திருஷ்டாந்த பூர்வகமாக நிரூபிக்கப்பட்டிருக்கின்றன.

நமது சிறுவர், சிறுமிகளும், ஸ்திரீகளும் அவசியமாய் உணரவேண்டிய இலௌகிக ஆசார விஷயங்களைப்பற்றி ஆங்காங்கு விளக்கிக் கூறப்பட்டிருக்கிறது. இதன் இனிமையும் அருமையும் வாசிப்போர்களால் முன்னமே புகழ்ந்து கூறப்பட்டிருக்கின்றன. ஆதலால் இதைப்பற்றி நாம் அதிகமாய்க் கூறவேண்டுவதில்லை. இதில் எல்லா ரசங்களும் பூரணமாயிருக்கின்றனவென்று கூறுகிறோம். இரண்டு பாகமும் விலை ரூபா 4 0 0

# அமராவதி அல்லது அதிசய மர்மங்கள்.

இது மிக்க பிரமையை யுண்டாக்கும் அற்புத சம்பவங்கள் நிறைந்த ஒரு நாவல். ஒருமனிதன் சுய நம்பிக்கையும், நேர்மையான நடக்கையும், ஊக்கமு முடையவனு யிருந்தால் அவன் தான் கோரிய காரியத்தில் கட்டாயம் ஜெயம்பெறுவான் என்பதும், எத்தகைய ஆபத்துகளிலும் தப்பித்துக்கொண்டு கீர்த்தியும் மேலான பதவியும் அடைவா னென்பதும் இதில் நன்குய் நிரூபிக்கப்பட் டிருக்கிறது. இதிலுள்ள ஒவ்வொரு சம்பவமும் அதியாச்சரியத்தை விளைத்து அடியோடு மனதைக் கவரத்தக்கதே. அசம்பாவிதமெனத் தோன்றும் அனேகச் சம்பவங்கள் இதில் உண்மையாகவே நடைபெறுவது வாசிப்போர்க்கு அளவற்ற மனமகிழ்ச்சியை யளிக்கும். இதில்வரும் முக்கிய பாத்திரங்கள் ஒவ்வொருவருடைய சரித்திரமும் ஒவ்வொரு வியப்பான துப்பறியும் கதையைப்போன்றிருக்கும். சுருக்கிக் கூறின் இந்த நாவலை பொரு அதிசயக் களஞ்சியமே யெனலாம்.

2-பாகமும் விலை ரூபா. 4.

# கமலசேகரன்.

ஓர் சுத்தவீரனுடைய அதிசயக்கதை. இக்கதாநாயகன் உயர் குலத்தில் பிறந்தவனே யெனினும் தன் சிறிய தந்தையின் மோசச்செயலால் அநாதைப்போல் அன்னியரால் வளர்க்கப்படுவதும் பிறகு தன் தந்தையர்களின் ஆவேசங்கள் அவனெதிரிற்றோன்றி அவனுக்கு வேண்டிய சமயங்களிலெல்லாம் உதவி செய்வதும் மிக்க ஆச்சரியமாக விருக்கும்.

இதில் அதிசயரசமும், சோகரசமும், வீரரசமும் உண்மைக்காதலின் அபூர்வ குணங்களும் நிறைந்திருக்கின்றன. இதன் விலை ரூபா 1 12 0.

# கனகபூஷணம்.

இதில் கற்பிலக்கணம் விவரமாய் உலக அனுபவத்தோடு விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. கதாநாயகி தனக்கு நேரிடும் மிக்க பயங்கரமான அனேக இக்கட்டுகளிலிருந்து தன் கற்புக்குப் பழுதுவாராமல் தப்பித்துக்கொள்வது மிக்க சோகத்தையும் ஆச்சரியத்தையும் தரும். சிறுவர்களுக்கு வேண்டிய நீதிகளும் நற்புத்திகளும் இதில் நிறைந்திருக்கின்றன. இந்த நாவல் ஆதிமுதல் அந்தம் வரையில் மனதை முழுதும் கவர்ந்து கொள்ளக்கூடியது. 2-பாகம் இதன் விலை ரூபா 3 8 0

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்

# மஞ்சள் அறையின் மர்மம்.

இதுகாறும் வரையப்பட்ட அனேகம் துப்பறியும் நாவல்களையும், இதர துப்பறியும் நாவல்களையும் வாசித்திருப்போர் இத்தகைய மிக்க ஆச்சரியமும் சாமர்த்தியமுமான துப்பறியும் நாவல் இதுகாறும் எழுதப்படவில்லையென்று எளிதில் உணர்வார்கள். இதில் குற்றம் செய்தவனுடைய சாமர்த்தியச் செயல்களும், குற்றத்தைக் கண்டு பிடிப்பவனுடைய சாமர்த்தியச் செயல்களும் ஒன்றுக்கொன்று இணையற்றன வாகவேயிருக்கும். குற்றம் நடந்த இடத்தின் படங்களும் சேர்ந்திருக்கிறது. விலை ரூ. 1—8—0

# மின்சாரமாயவன்.

மின்சாரமாயவனும் பெரியண்ணனும், ஸார்ஜெண்ட் கமலநாதனுடைய பெருமை, சந்தரபூபதி பிரபுவின் பணப்பெட்டிகள் களவாடப்படல், மின்சாரமாயவன் பிசாண்டிபுரம் பிரயாணம் போவது கவனிக்கத்தக்கது. இராஜாராம் வீடு பார்க்கத்தகுந்தது, நமச்சைக்கும் தம்பிக்கும் மனஸ்தாபம், பெண்களை கட்டில்லையாது ஆண் பிள்ளைகளை விடுவதுபோல் விட்டுவிட்டுவதால் நேரிடும் விபரீதங்கள், சாஹுர் ஹோட்டலில் மின்சாரமாயவனுக்கும் கந்தனுக்கும் சண்டை போலீஸார் சிப்பாய்களின் பாளையத்திற்கு வருதல், கமலநாதன் மின்சாரமாயவனுக்கு அதிக சாமர்த்தியமாயிருந்தும் ஐக்கியப்படல் (அதிசயம்) ஜெயதேவியும் அவன் அத்தையும் இரத்தினபுரியில் உலாவுதல் அவ்விடம் வேடிக்கையான ஆபத்து ஆச்சரியமாயிருக்கும். இதன் விலை ரூபா 1 8 0. கமலவன அற்புதம் 0 12

# மதனபூஷணம்.

இந்நூலில் குற்றவாளி உயிரோடிருப்பவனை இறந்து விட்டவனாகவும், இறந்து போனவனை உயிரோடிருப்பவனாகவும், படித்தோர் நம்பும்படி செய்வது மிக்க வியப்பையுண்டாக்கும். அத்தகைய கள்ளனுடைய குற்றங்களைக் கண்டுபிடிக்கும் துப்பறிபவன் சாமர்த்தியத்தையும் படித்துப் பார்ப்பது மிக்க அவசியமானது. தவிரவும் ஸ்திரீகளுக்கு அளவு மீறிய சுவாதீனமளிப்பதால் உண்டாகும் தீமைகள் இதில் நன்குய் விளக்கப்பட்டிருக்கின்றன. இதன் விலை ரூபா 1.

# விக்கிரமாதித்தன் கதை.

இதேமாதிரியான பெரிய யெழுத்தில் அச்சிட்ட சுத்தமான பதிப்பு லெத்தகிராப் படங்களுடன் யிருக்கிறது. ரப் விலை ரூபா 1 4 0.

# ஆரியப்ப புலவர் பாகவதம், ரூ. 3-8-0.

# அராபிக்கதை. விலை ரூபா 3.

# ஞானவாசிட்டம் மூலமும்,

## பதவுரை கருத்துரையும்.

இது வடமொழியினின்றும் பிரம்மஞானியான வீரை ஆளவந்தாரென்பவரால் தமிழில் கவிதா ரூபமாக மொழிபெயர்த்து, தக்கோரான பிறையாற்று அருணாசல சுவாமிகளால் பதவுரையும் கருத்துரையும் எழுதப்பெற்றுள்ளது 8 பக்கங்கொண்ட டிம்மி சைஸில் 2-பாகங்களாய் முதற் பாகம் 744 பக்கங்களும் 2-ம்பாகம் 716 பக்கங்களும் அடங்கியது. 2-பாகமும் விலை ரூ. 4.

விலாசம்:—ஆனந்தபோதினி ஆபீஸ், தபால் பெட்டி நெ. 167, மதராஸ்.

# விநோதரசமஞ்சரி.

இது ஒரு அற்புதமும் மனோகரமுமான வாசகநூல்; படிக்கப் படிக்கத் தெவிட்டாத இன்பத்தைத் தரத்தக்கது; செவிக்கினிய செஞ்சொற்களால் எழுதப்பட்டது; அறிவின் அபிவிர்த்திக்கும் சமயோசிதமாக ஆளக்கூடிய நட்புத்தியை அடைவதற்கும் மிக்க அநுகூலமானது; தகுந்த பழமொழிகள் ஆங்காங்கு அமையப்பெற்றது. கடவுளொருவர் உண்டென்பதை வெகு அழகாயும், சுருதி யுக்தி யநுபவங்களுக்குப் பொருத்தமாயும் பேசவல்லது; மக்கள் அறியவேண்டிய கல்வி, கற்பு, செய்ந்நன்றி யறிதல், நீதம், உழவின் ஏற்றத்தாழ்ச்சி முதலிய விஷயங்கள் நன்கு விளக்கப்பெற்றது. கம்பர், ஔவை, காளமேகம், புகழேந்தி முதலிய, கவீஸ்வரர்களின் அதிசயிக்கத்தக்க கவிகள் பல பொருள் விளக்கத்துடன் கொண்டுள்ளது; ஆண்மக்களே யன்றிப் பெண்மக்களும் ஓய்வு காலங்களில் படித்து ஆனந்திப்பதற்குரியது. இப்படிப் பயன்படக்கூடிய இந்நூலானது சென்னைத் துரைத்தன வித்யாசாலையிலிருந்த பெர்ஸிவல் துரையவர்களின் தூண்டுதலின் பேரில் ஷை கலாசாலையில் பிரதம தமிழ்ப்பண்டிதராயிருந்த அஷ்டாவதானம் வீராசாமி செட்டியார் அவர்களால் எழுதப்பெற்றுக் கலாசாலைகளிலும் வீடுகளிலும் வழங்கப்பட்டு வந்த விஷயம் யாவரும் அறிந்ததே. இந்தப் புஸ்தகத்தின் பிரதிகளில் (காபிகளில்) கொஞ்சம் ஆனந்தபோதினி ஆபீஸில் இருக்கின்றன. வேண்டியவர்கள் விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம். கிளேஸ் கடிதக் காபி யொன்றின் விலை ரூ. 2-8-0.

ஆனந்தபோதினி சந்தாதாரருக்கு 31-5-1925 வரையில் ரூபா 2.

ரப், திக் கடிதக்காபி யொன்றின் விலை ரூபா 2.

ஆனந்தபோதினி சந்தாதாரருக்கு 31-5-1925 வரையில் ரூபா 1-8-0

# லோகநாயகி அல்லது அதிசயப் புதையல்.

பண ஆசை எத்தகைய பெரும்பாதகத்தையும் செய்யத் தூண்டும் கொடிய பேய் என்பதும், அக்கிரமஸ்தரும், நம்பினவர்களைத் துரோகம் செய்யும் பாதகரும் முடிவில் ஆண்டவனால் எப்படியும் தண்டிக்கப்படுவோர்கள் என்பதும், நீதியும் சத்தியமு முடையோர் முதலில் கஷ்டத்தை யநுபவித்தாலும் முடிவில் பூரண நன்மையை யடைவார்கள் என்பதும், இக்கதையில் நன்கு நிரூபிக்கப்படுகிறது. கதாநாயகியாகிய லோகநாயகியின் புத்திசாதுர்யமான நடக்கைகளும், துப்பறிபவனது சாமார்த்தியமும், ஆரம்பத்திலிருந்தே ஒன்றின்பின் ஒன்றாக நேரிடும் அதிசய சம்பவங்களும், போய்விட்டதென்று யாவரும் கைவிட்டுவிட்ட பொக்கிஷத்தைத் துப்பறிபவன் எடுத்தளிக்கும் சாமார்த்தியமும் நீதியும், இதை வாசிப்போர்க்கு ஆதிமுதல் அந்தம் வரை வியப்பையும் உற்சாகத்தையும் அளிக்கும். விலை ரூ. 1.

# விளையாட்டுச் சாமான்

## அல்லது விபரீதக் கொலை.

இக் கதையில் மூன்று அதிசயக்கொலைகள் நடக்கின்றன. குற்றத்தைச் செய்த ஆசாமிகள் மிக்க தந்திர சாமார்த்தியத்தோடு தங்கள் குற்றங்களைச் செய்கிறார்கள். அதனால் ஒரு நிரபராதி கைது செய்யப்படுகிறான். வேறு சிலர்மேல் சந்தேகமுண்டாகிறது. கடைசியில் துப்பறிபவனுடைய தைரியமும், துணிகரமும் புத்திசாலித்தனமுமான முயற்சிகளால் மிக்க சாமார்த்தியவான்களான குற்றவாளிகள் கண்டு பிடிக்கப்படுவது மிக்க அதிசயத்தை விளைவிக்கும். இதன் விலை ரூபா. **1-6-0**.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

வெளிவந்து விட்டது! **தமிழகராதி.** விற்பனைக்குத் தயார்!!

ஸ்ரீமான் S. அனவரதவிநாயகம் பிள்ளை, M.A., L.T., அவர்கள் தொகுத்தது.

**528** பக்கங்கங்கள்கொண்டது. முழு காலிகோவில் நேர்த்தியாக பைண்ட் செய்யபபட்டது.

பெரிய அகராதிகளிருப்பினும் இது மாணவர்களின் உபயோகத்திற்காகவென்று முன்னுள்ளவற்றில் தகுதியல்லாத சொற்களை நீக்கியும், மாணவர்களுக்கு அவசியமான இலக்கிய இலக்கண மொழிகளைச் சேர்த்தும் தொகுக்கப்பட்டது. இது மாணவர்களுக் கென்று தொகுக்கப்படினும் ஒவ்வொருவருக்கும் பயனளிக்கக்கூடியதே. விலை ரூபா 2 8 0.

# ஸ்ரீ மகா பக்தவிஜயம்.

## முதல் பாகம்.

நெடுங்கடல் சூழ்ந்த இந்நிலவுலகத்தில் தோன்றிய சகல ஜீவராசிகளையும் பாதுகாத்தருளும நீலமேக வண்ணனாகிய ஸ்ரீமந் நாராயண மூர்த்தியின்மீது உண்மையான பக்தி பூண்டு உறுதியுடன் அவரைத் தியானித்து ஸ்தோத்திரம் புரிந்து அவருடைய கிருபாகடாக்ஷத்தினாலே வைகுண்டப்பதி எய்தி அவர் திருவடி நிழலையடைந்த பக்தர்கள் பலராவர். அவர்கள், உலக பந்தங்களினின்றும் விடுபட்டுத் தாமரைக் கண்ணனாகிய விஷ்ணு பகவான்மீது பக்தி செலுத்திய விதங்களும், அவர்களால் உண்டாகிய அற்புதங்களும், ஆதிமூலக் கடவுள் அவர்களுக்குக் காட்சி தந்து அவர்களைத் தம் அடி நிழலில் சேர்த்து ஆதரித்த மகிமைகளும், சகலரும் அதிசயித்து ஆனந்தத்தை அடையக்கூடியனவா யிருக்கும். அன்றியும், உலகத்தவர்களைத் திருமாலின் பக்தியில் திரும்பச் செய்து நற்கதிகளிலும் செலுத்தக் கூடியவை. அவற்றை மானிடராயினோர் எவரும் அறிந்திருக்கவேண்டியது அவசியமாம். ஆதலின், அத்தகைய சத்துவ குணசீலர்களாகிய பக்தர்களில் மகிமை வாய்ந்த அநேகருடைய சரித்திரங்களை பற்பல தேசங்களிலுள்ள வித்வான்களும் பற்பல பாஷைகளில் எழுதி வெளிப்படுத்தி யிருக்கின்றனர். அவற்றைப் பல வகுப்பினரும் படித்து நற்பயன் அடைந்து வருகின்றனர். அவற்றைப்போலவே நம் தமிழ் நாட்டிலும், செந்தமிழில் எண்ணிறந்த பக்தர்களின் சரித்திரங்கள, சிறந்த தமிழ்ப் புலவாகளால் எழுதி வெளிப்படுத்தப்பட் டிருக்கின்றன. அவைகள் தமிழ் நாட்டினர்க்குப் பெரிதும் பயன்படுவரினும், பலருடைய சரித்திரங்களும் சேர்ந்த பெரிய புஸ்தகங்களை அதிக விலை கொடுத்து வாங்குவது அநேகருக்குக் கஷ்டமாயிருக்கின்றது. அதனால், அச்சரித்திரங்களை யெல்லாம் பல பாகங்களாகப் பிரித்து ஒவ்வொரு பாகத்திற்கும் குறைந்த விலை யேற்படுத்தி வெளிப்படுத்தினால், விஷ்ணு பக்தர்கள் ஒவ்வொன்றாக வாங்கிப்படித்தற்கு அநுகூலமாயிருக்குமென்று நினைத்து இப்பொழுது சில முக்கியமான பக்தர்களின் சரித்திரங்களைத் தேர்ந்தெடுத்துச் செந்தமிழ் வசனமாக அச்சிட்டு "ஸ்ரீ மகா பக்த விஜயம் முதற் பாகம்" என ஓர் அரிய புத்தகமாக வெளிப்பட்டிருக்கின்றனம்,

இதில், ஜெயதேவர், கபீர்தாஸ், துளசிதாஸ், நாமதேவர், ஞானேசுவரர், குசேலர் ஆகிய ஆறு பக்தாகளின் சரித்திரங்கள் அடங்கி யிருக்கின்றன. இந்த ஆறும், ஆறு இரத்தினங்கள் போன்றவை. இப் புத்தகம் ராயல் 4-பேஜ் சைஸில், 83 பாரம், 332 பக்கங்கள் கொண்டதாக நப் கடிதத்தில் சுத்தமாக அச்சிட்டு, அழகிய க்டிப் பைண்டு செய்யப்பட்டிருக்கிறது. இது, தமிழ் ஞானத்தையும், நல்ல விவேகத்தையும், தெய்வ

பக்தியையும், நற்கதியையும் உண்டாக்கக்கூடிய உத்தம பக்தர்களின் உண்மைச் சரிதைகளடங்கியதாதலின், சகலரும் வாங்கி வாசிக்கக்கூடியது. ஆதலின், ஒவ்வொரு குடும்பத்தினரும் இதனை வரவழைத்துப் படித்து நற்பயன் அடையும்படி வேண்டுகிறோம்,

இதில் அடங்கியிருக்கும் விஷயங்களாயின :—

பாயிரம், நூற்பெருமை, பண்டரிபுர வரலாறு, புண்டரீக பக்தன் வரலாறு, நூல்வரலாறு, ஜெயதேவர் சரிதை, ஜெயதேவர் உற்பத்தி, ஜெயதேவர் உலகவிரக்தி, ஜெயதேவர் கைகால்கள் வெட்டுப்படல், ஜெயதேவர் காட்டை யடைதல், அவரை பத்மாவதி தரிசித்தல், கள்வர் பாதாளத்தில் அமிழ்தல், ஜெயதேவர் கள்வரைக்காத்தல், பத்மாவதி மரித்தல், பத்மாவதி உயிர்பெறல், பகவான் பிராமண வடிவாய் வந்து சுயரூபங் காட்டுதல், ஜெயதேவர் பாடிய பாகவதத்தை பகவான் பிராமண வடிவாய் வந்து வாசித்துச் சுயரூபங்காட்டினது, ஜெயதேவர் செய்த முப்பது அஷ்டகங்களைக் கங்கையில் விடுத்துப் பரீக்ஷித்தல், பிரமோபதேசம், கபீர்தாஸ் சரிதை, கபீர் ஜனனம், கபீர் சுன்னத்துச் செய்வதை மறுத்தது, பிராமண வடிவமாய் வந்த பகவானுக்குக் கபீர் வஸ்திரதானஞ் செய்தது, கபீருக்குப் பகவான் பக்கீர் ரூபமாய்வந்து சுயதரிசனங் கொடுத்தது, இராமானந்த சுவாமிகளின் பணிவிடைக்காரர்களால் கபீர் அடிபட்டது, கபீர் இராமானந்த சுவாமிகளின் ஆசீர்வாதம் பெற்றது, கபீர் இராமானந்த சுவாமிகளிடம் உபதேசம் பெற்றது, கபீர் துலுக்க மதத்தைக் கண்டித்தது, கபீர் கோரக்கரைவென்றது, கபீரின் விவாகம், கபீர் பசுவின் கன்றைக்கொல்லாமல் மறுத்தது, கபீர் மனைவியை வர்த்தகனுக்களித்தது, கபீர் குமாரனாகிய கமால் யாத்திரை செய்தது, துளசிதாஸ் சரிதை, துளசிதாஸ் ஜனனம், பகவான் துளசிதாசரைக் காமத்தில அழுத்தியது, துளசிதாஸர் ஸ்திரீ வாஞ்சை, துளசிதாசர் வைராக்கியம், துளசிதாசர் பூததரிசனம், துளசிதாசருக்கு அனுமார் தரிசனந்தரல், துளசிதாசருக்கு ஸ்ரீ இராமர் தரிசனமாதல, துளசிதாசர் ஞானோபதேசம் பெறல், துளசிதாசரின் மடத்திற்குப் பகவான் காவலாயிருந்தது, துளசிதாசரைப் பகவான் சோதித்தல், பகவான் துளசிதாசர் உருவமாய் வந்து இறந்த பிராமணனை எழுப்பல், துளசிதாசர் அக்பர் பாதுஷாவைப் பங்கப்படுத்தியது, துளசிதாசர் அக்பர் பாதுஷாவுக்கு அனுக்கிரகஞ் செய்தது, நாமதேவர் சரிதை, நாமதேவர் உற்பத்தி, நாமதேவர் பகவானுக்கு அன்னமூட்டுதல், நாமதேவருக்குப் பகவான் விவாகஞ் செய்தது, நாமதேவருக்குப் பகவான் இலக்ஷம் வராகன் அளித்தது, பகவான் கூலிக்காரனாய் வந்து நாமதேவருக்குப் பணி செய்தது, நாமதேவர் குமாரனுக்குக் காது குத்தி மயிர் வாங்கும்போது பகவான் வரிசை கொண்டுவந்தது, ஞானேசுவரர் சரிதை, ஞானேசுவரர் தந்தை விடோபா யாத்திரை, சன்னியாசி விடோபா; விடோபா ஞானோபதேசம் பெறல், விடோபா கிரகத்தாச்சிரமம், திரிமூர்த்திகளும் ஆதிசத்தியும் உற்பத்தி, விடோபா சஞ்சலத்துக்காற்றாமல் பரப்பிரமத்தைத் துதித்தல், ஞானேசுவரர் அந்தணரை அவமானப்படுத்தி ஐசுவரியம் பெற்றது, ஞானேசுவரர் தந்தையை நாட்டிற் கழைத்து வந்தது, ஞானேசுவரர் எருமைக் கடாவினால் வேதத்தை விரித்துரைத்தது, குசேலர் சரிதை, ஸ்ரீ சுகப்பிரம ரிஷி வாக்கியம், குசேலர் துவாரகையைக் கண்டு தம் நகரப்புறம் அடைந்தது, குசேலர் ஸ்ரீ ராதா ருக்மணி சமேதராயிருந்த மணிவண்ணனைக் காணுதல், குசேலர் செல்வங்களை அனுபவித்துப் பரமபதமடைதல் முதலியவைகளாம்.

இதன் விலை ரூபா 2.

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு 30-4-25 வரையில் ரூபா 1-4-0.

"ஆனந்தபோதினி" ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

# கைவல்ய நவநீத வசனம்

ஸ்ரீமத் அகண்ட பரிபூரண சச்சிதானந்த சொரூபியாகிய பகவான் அநாதியே ஆணவமலத்தில் அழுந்திக்கிடந்த ஆன்மாக்களுக்குக் கருணையோடு தநுகரண புவன போகங்களை யளித்தருளினார். இந்த ஆன்மாக்கள் மாயையினின்றும் விடுபட்டு துக்க நிவர்த்தியும் ஆனந்தப் பிராப்தியுமாகிய மோக்ஷமெய்தும் பொருட்டே கருணாநிதியாகிய ஆண்டவன் அவ்வாறு செய்தருளினார். மோக்ஷ மார்க்கத்தை யறிவிக்கும் வேதத்தையும் அருளியிருக்கிறார்

வேதமோ யாவராலும் உணரற் பாலதன்றாகும். ஆதலில் மகான்களாகிய நம் முன்னோர்கள் வேதசாரத்தைத் திரட்டி அதிகாரிகளின் பேதப்படிப் பல நூல்களை யியற்றியுள்ளார்கள். அவற்றில் ஸ்ரீமத்-தாண்டவராய சுவாமிகள் இயற்றி யருளிய கைவல்ய நவநீதம் என்ற நூல் மோக்ஷ மார்க்கத்தைப் பூரணமாய் விளக்கிக்காட்டும் நூலாகும். இதில் கூறப்பட்டுள்ள முத்தி மார்க்கம், ஈசுவர பக்தியுடைய எவருக்கும் (ஜாதி மத பேதமின்றி) பயன்படக் கூடியதாகும். மூலநூல் கவிகளாயுள்ளது. அந்த நூலுக்குச் சிலர் உரை யெழுதியுள்ளார்கள். ஆனால் கோயிலூர் ஸ்ரீமத்-பொன்னம்பல சுவாமிகள் இயற்றிய உரையே சால சிறந்ததென்று மதிக்கப்படுகிறது.

ஆயினும் இரகசிய இலக்கண ஆராய்ச்சியுடையார்க்கே இவை நன்கு விளங்கும். ஆதலில் சாதாரணக் கல்வியுடையோரும் வாசித்துணர்ந்து பயனடைய வேண்டுமென்றே வசனரூபமாய் நமது ஆனந்தபோதினி சஞ்சிகையில் வெளியிடப்பட்டது இப்போது புத்தக ரூபமாய் வெளிவந்திருக்கிறது. இதில் வாசிப்போர்க்குண்டாகக்கூடிய அய்யங்களனைத்தும் தெளிவாய் எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறபடியால் கூடியவரையில் இன்னொருவரிடம் சென்று கேட்கவேண்டிய அவசியமின்றியே சொல்ப கல்வி யுடையோரும் இதை வாசித்துணர்ந்துப் பயன் பெறலாகும். நல்ல கடிதத்தில் சுத்தமாய் அச்சியற்றப்பட்டிருக்கிறது. இதன் விலை ரூபா 1 8 0.

மூன்றாம் பதிப்பு!

# தினகரசுந்தரி

விலை ரூபா 1.

## ஓர் செல்வச் சீமாட்டியின் அதிசயமான கதை

இக் கதாநாயகி ஆண் வேடந்தரித்து, தன் கணவனாகிய செல்வச் சீமானுடைய சோரச் செயலைக் கண்டுபிடிப்பது மிக்க வியப்பாயிருக்கும். அதிலும் இவள் மிக்க துஷ்டரான கள்ளரிடம் சிக்கிக்கொண்டு அவர்களைச் சாமர்த்தியமாய் ஏமாற்றிவிட்டுத் தப்பித்துக்கொண்டு வந்து விடுவது மிக்க வியப்பிலும் வியப்பாயிருக்கும்.

இக்கதா நாயகியின் குற்றமற்ற இரகசியங்களை வெளியிடுவதாய்ப் பயமுறுத்தி இவளைச் சோரம்செய்ய முயற்சி செய்யும் துஷ்டர்களை இவள் தந்திர சாமர்த்தியத்தால் வென்று அவர்கள் வெட்கிப்போகும்படிச் செய்தல் மிக்க வீரத்தனமாயும் வேடிக்கையாயுமிருக்கும்.

தான் பலவித ஆபத்துகளில் சிக்கியபோதும் தன் சுய தந்திரத்தால் தன் கற்பிற்குப் பழுது வராமல் தப்பித்துக்கொண்டு தன் கணவனுக்கு மனம் நோகாதபடிக்கு அவனுக்கு நேரிடவிருந்த அவமானத்தினின்றும் அவனைக் காப்பாற்றுவதையும், மாமியார், மைத்துனர், நாத்திமார் இவர்களை யன்போடு ஆதரிப்பதும் இவளுடைய கற்பின் உறுதியையும் குடும்ப விஷயத்திலிருக்கும் உயர்தரமான நடக்கையையும் நன்கு விளக்குகிறது.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

# இந்திராபாய்

## அல்லது இந்திரஜாலக்கள்ளன்.

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியா ரவர்களால் எழுதப்பட்டது

இதில் 5 ஆப்டோன் படங்கள் சேர்க்கப்பட்டிருக்கிறது

இது ஒரு துப்பறியும் நாவல்: ஆனால் அநேகம் துப்பறியும் நாவல்களை விட இது மிக்க அபூர்வமானது. இதில் சம்பந்தப் பட்ட குற்றவாளியாகிய முஷ்டிக்காம் என்ற கள்ளன் கல்வி, சாத்திர ஆராய்ச்சி, தந்திரம், சாமார்த்தியம் முதலிய யாவும் உடையவனாதலின், அவன் தன் கூட இருக்கும் ஆட்களுக்குக்கூட தன் சுய உருவத்தைக் காட்டாமலே செய்யும் மிக்க அபூர்வமானவையும், கேட்போர் நெஞ்சம் கலங்கும்படியானவையும், முதலில் அசம்பாவிதமாகத் தோற்றத் தக்கவையுமான பல கொலை களவுகள் மிக்க அதிசயமானவைகளாகவும் இதுகாறும் கேட்டிராத விதமான கதைகளாகவுமே யிருக்கும்.

இந்திராபாய் பன்முறைகளில் அவனிடம் சிக்கிக்கொண்டு சற்றும் எதிர்பாராத ஆச்சரியமான விதமாய்ப் பிராணாபத்துகளி லிருந்து தப்புவதும், அவளைக் காப்பாற்றவும், முஷ்டிக்காத்தைக் கண்டு பிடிக்கவும் துப்பறியும் கிருஷ்ணாராவ் செய்யும் அற்புத சாமார்த்தியங்களும் வாசிப்போர்க்கு மிக்க பிரமையை யுண்டாக்கும். துப்பறியும் நாவலில் பிரியமுடையோர் இதை வாசிக்காதுவிட்டால் பின்னால் அதற்காக உண்மையில் வருத்தப் படுவார்கள் உயர்ந்த க்லேஸ் கடிதத்தில் அச்சியற்றப்பட்டது. சுமார் 530 பக்கங்கள் கொண்டது. விலை ரூபா 2—8—0

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு 31-5-'25 வரையில் ரூ. 2.

## கோமளவல்லி.

ஐயன்மீர்! கோமளவல்லி அம்மாளுக்கும் சத்தியவல்லி அம்மாளுக்கும் நடந்த சக்களத்திபோராட்டம் லீலாவதிசுலோசனாவுக்கு ஏற்பட்ட அக்கா தங்கை சக்களத்தி போராட்டத்திற்கு அதிகமாகவும் கோமளவல்லியால் துரத்தப்பட்ட உத்தமி சத்தியவல்லி காளியம்மன் ஆலயத்திலிருந்த ராக்ஷஸன் பிராணனை அடியோடு வாங்குவதும், ராக்ஷஸனால் தவிக்கிற தலைமுண்டங்களை உயிரோடு எழுப்புவதும் கற்பூரமலையில தன் கற்பு மகிமையை காண்பிப்பதும் இறந்த கோமளவல்லி குழந்தையை உயிருடன் எழுப்புவதும், இன்னும் அதியற்புதமான விஷயங்களும் இருக்கின்றன. கடைசியில் அறிவானந்த மகாராஜனும் சத்தியவல்லி அம்மாளும் ஆண் பிள்ளையைப் பெற்று சுகமாய் வாழ்ந்திருந்தார்கள் இப்புஸ்தகம் கையிலெடுத்தால் முடியும்வரையில் கீழே வைக்க மனம் துணியாது. விலை அணா 8.

187468

## திருவாசகம்.

[illegible] திருவாதவூரடிகள் திருவாய் மலர்ந்தருளிய இம் மெய்ஞ்ஞான நூல் மாணிக்கம்போலும் [illegible] ஜொலிக்கத்தகுந்த பாடல்களைக் கொண்டிருத்தலால் திருவாதவூரடிகளுக்கு "மாணிக்க வாசகர்" என்னும் சிறப்புப் பெயர் சாக்ஷாத் சிவபெருமானால் அளிக்கப்பட்டது. ஞான பக்தியை யூட்டவல்லது. நாவுக்கும் ருசிக்கும் தெவிட்டாத இனிமையைத் தரவல்லது. எழுத்துப் பிழையின்றி சுத்தப் பிரதியாக கிளேஸ் பாக்கட் சைஸில் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது. விலை ரூ. 1.

187468

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு 31-5-'25 வரை அணா 12.

விலாசம்— ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.